இலவசப் பிரதி

Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

நத்தார் வாழ்த்துக்கள்
லொயலாஸ் கல்யாண மண்டபம்
59, பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P- 2223352
எங்கள் சேவை உங்கள் தேவைக்கே

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 மார்கழி 10 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷவ்வால் 20 (25.12.2002) புதன்கிழமை இதழ் : 85



யாழ்.மரியன்னை பேராலயத்தில் நேற்று நள்ளிரவு நடைபெற்ற நத்தார் தின ஆராதனை

# மீள் குடியேற்ற உடன்பாட்டிலிருந்து அரசாங்கம் விலகிச் செல்கின்றது !

## ராணுவத்தின் திட்ட வரைவு குறித்து சு.ப தமிழ்ச்செல்வன் கருத்து

(கொழும்பு)

**இலங்கை அரசு, விடுதலைப் புலிகளுடன் மீள்குடியேற்றங்கள் தொடர்பாக கண்ட இணக்கப்பாட்டிலிருந்து விலகிச்செல்வது போன்றே தெரிகின்றது. அண்மையில் படையினரால் சமர்ப்பிக்கப்பட்ட உயர்பாதுகாப்பு வலயங்களில் மீள்குடியேற்றம் தொடர்பான அறிக்கையைப் பார்க்கும்போது இது தான் புலப்படுகிறது என விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கருத்துத் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி சென்ற திவயின பத்திரிகை நிருபர் ஜினசேன ரத்துகமவிற்கு அவர் பேட்டியளித்துள்ளார்.

அப் பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அப் பேட்டியில அவர் மேலும் -பாதுகாப்பு வலயங்களினுள் மக்கள் குடியேறி முன்னர் போன்று தமது வாழ்வைக் கொண்டு செல்ல வேண்டும். இதில் மாற்றம் செய்ய அரசுக்கும் புலிகளுக்கும் இடமில்லை எனவும் தமிழ்செல்வன் மேலும தெரிவித்தார்.

புலிகள் மீண்டும் யுத்தத்தை ஆரம்பிப்பார்களா என ரத்துகம கேட்டதற்கு, யுத்தம் என்கின்ற அவலங்கள் நிறைந்த அழிவை யாருமே விரும்பவில்லை. எமது தலைவரைப் பொறுத்தவரையில் இது விடயமாக மிகத் தெளிவாக தனது நிலைப்பாட்டை மாவீரர்தின உரையில் கூறியுள்ளார். கடந்த தேர்தலில் பிரதமரணில் விக்கிரமசிங்கவுக்கு சமாதானத்தில் ஈடுபடும்படியே மக்கள் ஆணை வழங்கியிருந்தனர்.

சமாதானத்திற்கு எதிராக இராணுவம் செயற்பட்டால் அதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.நகரில் தீ விபத்து பட்டாசுக்கடை நாசம்!

(யாழ்ப்பாணம்)



யாழ்.நகரில் நேற்று பட்டாசுக்கடையொன்றில் திடீர் என்று தீப்பிடித்துக்கொண்டது. மேற்படி தீ விபத்து யாழ். முனீஸ்வரன் வீதியில் நேற்று மாலை இடம்பெற்றது.

இச்சம்பவத்தின் போது இரண்டு பட்டாசுக்கடைகளும் இரண்டு புடவைக் கடைகளும் எரிந்து நாசமாகின. இவ்விபத்தின்போது சுமார் எட்டு லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் அழிவடைந்தன.

இவ்விபத்து நடைபெற்ற சமயம் பொதுமக்கள் பலர் இணைந்து தீயை அணைத்தனர். தீயணைந்து முடிவடைந்த பின்னரே அவ்விடத்துக்கு தீயணைப்புப் படையினர் வந்து சேர்ந்தனர். (க)




## ஒரு வருட சமாதான காலத்தில் 4500 படையினர் தப்பியோட்டம்

(கொழும்பு)

இன்றுடன் முடிவடையும் ஒரு வருட சமாதான காலத்தில் மட்டும் 4500 படையினர் இராணுவத்தை விட்டுத் தப்பியோடியுள்ளனர்.

இவர்களுள் 20 க்கும் மேற்பட்டோர் அதிகாரிகள் தரத்தவர் என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்குமுன் - 2000 ஆம் ஆண்டில் 46 அதிகாரிகள் உட்பட 5866 படையினரும், 2001 ஆம் ஆண்டில் 114 அதிகாரிகள் உட்பட 4871 படையினரும் இராணுவத்தை விட்டுத் தப்பியோடியுள்ளனர்.

சமாதானம் ஆரம்பித்தும் தப்பியோடுவோர் எண்ணிக்கை குறையவில்லை என்று இராணுவ உயரதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

## சமாதானப் புறா பறக்கவிட்டு நள்ளிரவு ஆராதனைகள்

(யாழ்ப்பாணம்)

நத்தார் பண்டிகையை ஒட்டிய விசேட வழிபாடுகள், நேற்று நள்ளிரவு யாழ்.பெரிய கோயிலில் நடைபெற்றபோது பெருமளவு மக்கள கலந்து கொண்டனர்.

சமாதானத்தை வலியுறுத்தும் வகையில் வழிபாட்டின் ஆரம்பத்தில் யாழ்.ஆயர் சமாதானப்புறாவை பறக்கவிட்டார். இதனைத் தொடர்ந்து விசேட வழிபாடும் ஆராதனைகளும் நடைபெற்றன. (க,சே)

### விண்ணாணம் விநாசியர்



ஏமாளிப்பட்டம் கட்டுற நிலமை இனியும் எங்களுக்கு இருக்கக் கூடாது.

## நிரந்தரமான சமாதானமே இலங்கையரின் நத்தார் செய்தி

### அதி வண. ஒஸ்வால்ற் கோமிஸ்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தை வெற்றிபெற்று நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டும் என்பதே இலங்கையர்கள் அனைவருக்குமான நத்தார் தினச் செய்தியாகும் என கத்தோலிக்கத் திருச்சபையின் பேராயர் அதி வண. ஒஸ்வால்ட் கோமிஸ் தெரிவித்தார்.

கொட்டாஞ்சேனை சென்.லூசியஸ் தேவாலயத்தில் இன்று அதிகாலை நத்தார் திருப்பலியை ஒப்புக்கொடுத்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

சமாதானப் பேச்சுக்களை

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஈராக்கிய விஞ்ஞானிகளையும் விசாரிக்கும் ஐ.நா.பரிசோதகர்



(பாக்தாத்)
ஈராக்கின் ஆயுத வேலைத் திட்டங்களை நிறைவேற்றியுள்ள விஞ்ஞானிகள் என அமெரிக்கப் புலனாய்வுத்துறையினர் இனங்காட்டியோரை ஆயுதப் பரிசோதகர்கள் விசாரணை செய்யத் தொடங்கியுள்ளனர்.

இதேவேளை- சர்வதேச அணு சக்தி முகவரகத் தலைவர் முகமட் எல்பராடி கருத்து வெளியிடுகையில் -தற்பொழுது தாங்கள் ஈராக்கிய மக்களுடன் நேடியாகத் தொடர்பு கொண்டிருக்கிறோம், படிப் படியாக சதாமின் பிடிக்குள் இருந்து மக்களை வெளியே எடுப்போம் எனக் கூறியுள்ளார்.

இதுஇவ்வாறிருக்க - தெற்கு ஈராக்கில், ஈராக்கின் யுத்த விமானம் ஒன்று, அமெரிக்கப் படையினரின் ஆளில்லாத உளவு விமானம் ஒன்றைச் சுட்டு வழ்த்தியுள்ளது. ஈராக்கின் விமானங்கள் பறப்பதற்கு அமெரிக்காவினால் தடை விதிக்கப்பட்ட பிரதேசத்திலேயே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

## நத்தார் வழிபாட்டிற்கு வசதியாக

# பெத்தலகேம் ஆலயங்களிலிருந்து இஸ்ரேலியப் படைகள் விலகின!




(பெத்தலகேம்)
இயேசு கிறிஸ்து பிறந்த இடம் எனக் கருதப்படும் பெத்தலகேமில், அது இஸ்ரேலிய இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசமாகவுள்ள நிலையிலும் கிறிஸ்மஸ் விழா விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றது.

நள்ளிரவு ஆராதனைக்குரிய வசதிகளைச் செய்து கொடுக்கும் நோக்குடன், இஸ்ரேல் இராணுவத்தினர் அனைத்து தேவாலயப் பகுதிகளில் இருந்தும் விலகியுள்ளனர்.

சென்ற வருடம் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலை அடுத்து இஸ்ரேலிய இராணுவம் மேற்குக் கரை நகரமாகிய பெத்தலகேமினை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேலிய அரசாங்கம் நள்ளிரவு ஆராதனைக்கு வசதியாக காஸாப் பகுதிகள், மேற்குகரை நகரங்களில் இருந்து விசேட பஸ் சேவைகளையும் நடத்தியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 08 - 06 - 1942



உதிர்வு 25 - 11 - 2002

### அமரர் கனகசபை பாலச்சந்திரன்
(ஓய்வுபெற்ற தபால் தரம் பிரிப்பாளர் -M.S.O.)

25.11.2002 இல் சிவபதம் அடைந்த கனகசபை பாலச்சந்திரன் அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு எமது துயரினைப் பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று 25.11.2002 புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.11, ஆசீர்வாதப்பர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(சி-349)

குடும்பத்தினர்.


## உலகவலம்

### ஐவரிக்கோஸ்ட் போராளிகள் ஒன்றிணைய இணக்கம்



ஐவரிக்கோஸ்ட்டில் போராடும் மூன்று போராளிக் குழுக்களும், தங்களிற்கிடையே பொதுவான ஒரு செயற் திட்டத்தினை மேற்கொள்வதற்காக நேற்று ஒன்றுகூடி ஆராய்ந்துள்ளனர்.

ஐவரிக்கோஸ்ட் இராணுவத்தினருக்கு எதிரான யுத்தத்தில் ஈடுபட்டு வரும் போராளிகளே ஒன்றிணைந்து செயற்பட இணங்கியுள்ளனர்.

தேசபக்த இயக்கம், நீதிக்கும் அமைதிக்குமான இயக்கம், ஐவோரியன் இயக்கம் ஆகிய மூன்று போராளி அமைப்புக்களே தமக்கிடையிலான பொது வேலைத் திட்டத்தின் கீழ் இணைந்துள்ளன.

கடந்த சனிக்கிழமை தவறுதலாக இடம்பெற்ற பிரான்சியப் படையினருடனான மோதல்கள் பற்றியும், கலந்துரையாடப்பட்டதாக போராளிக்குழுத் தலைவர் ஒருவர் செய்தி ஊடகத்திற்கு தகவல் வெளியிட்டுள்ளார்.

அதேவேளை, பிரான்சியப்படைகள் சுட்டதில் மூன்று வாகனங்கள் அழிக்கப்பட்டதுடன் போராளிகள் சிலரும் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### ஈரானில் விமானம் வீழ்ந்து 46 பயணிகள் பலி

(தெஹ்ரான்)
உக்ரைன் நாட்டிற்குச் சொந்தமான பயணிகள் விமானம் ஒன்று ஈரானில் விபத்திற்குள்ளானதில், 46 பயணிகள் கொல்லப்பட்டுள்ளனர். இறந்தவர்களில் விமானிகளும் உள்ளடங்குவர்.

ஈரானிய போக்குவரத்து அமைச்சர் அகமட் கோரம் தகவல் வெளியிடுகையில் - 42 பொதுமக்கள் கொல்லப்பட்டதனை உறுதிப்படுத்தியுள்ளார்.


சங்கானை
11.00, 2.45, 6.00 (பு.நே) இன்று முதல
சரத்குமார், நெப்போலியன், தேவயானி நடித்த
தென்காசிப்பட்டணம்
(சி/287)
27.12.2002 முதல் வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)மட்டும் JACKION நடித்த
SHAFT


## இன்றைய நாள் இனிய நாள்

### 25-12-2002 - புதன்கிழமை

சித்திரபானு ஶ்ரீ, மார்கழி மீ - 9 ஆம் திகதி

*திதி* - அபர பட்ச ஷஷ்டி - இரவு - 8.19 வரை அதன் பின் சப்தமி

*நட்சத்திரம்* - பூசம் - பின்னிரவு 4.58 - வரை அதன் மேல் உத்திரம்

**மேடம்** :- தேகசுகக் குறைவு, புத்திரரால் கவலை, தெய்வ வழிபாடு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார சமநிலை.

**இடபம்** :- தேகசுகக் குறைவு, பணவரவு குறைவு, மாதா சுகயீனம், வாகனச் செலவு, கல்வியில் முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**மிதுனம்** :- தேகசுகம் நன்று, பணவரவு, காரிய சித்தி, பெண்கள் மகிழ்வு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார சமநிலை.

**கர்க்கடகம்** :- தேகசுகக் குறைவு, வரவுக்கு மிஞ்சிய செலவு, வீண் வாக்குவாதம், கல்வியில் முன்னேற்றம், வியாபாரம் சமம்.

**சிங்கம்** :- தேகசுகம் நன்று, பணவரவு, அறுசுவையுண்டி, ஆடையலங்காரம், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்

**கன்னி** :- தேகசுகக் குறைவு, வீண் செலவு, மிதமிஞ்சிய உணவு, வாக்குவாதம், கல்வியில் சமநிலை, வியாபார முன்னேற்றம்,

யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர் அவர்களின் சகோதரரின் புத்திரர் இ.வெங்கடேச ஐயர்.

**துலாம்** :- தேகசுகம் சமம், பணவரவு சமம், தெய்வபக்தி, சமய அறிஞர் உறவு, கல்வியில் முன்னேற்றம் வேண்டும், வியாபாரம் சமம்,

**விருச்சிகம்** :- தேகசுகம் நன்று, பணவரவு நன்று, தொழிற் சிறப்பு, புதிய தொழில் வாய்ப்பு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரத்தில் ஊக்கம் வேண்டும்.

**தனு** :- தேகசுகக் குறைவு, பிதாவுடன் மனஸ்தாபம், வைத்தியச் செலவு, கல்வியில் ஊக்கம்வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**மகரம்** :- தேகசுகக் குறைவு, பணவரவுக் குறைவு, புதிய காரியங்களில் ஈடுபடுதலைத் தவிர்க்கவும், கல்வியில் முன்னேற்றம், வியாபாரம் சமநிலை.

**கும்பம்** :- தேகசுகம் நன்று, பணவரவு, நண்பர்கள் உறவினர் சங்கமம், அறுசுவையுண்டி, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**மீனம்** :- தேகசுகம் நன்று, பழைய கடன் வரவு, காரிய சித்தி, எதிரி தலைகுனிவு, கல்வியில் ஊக்கம் வேண்டும். வியாபார முன்னேற்றம்.


TRRO
## முயற்சி – திறன் விருத்தி மையம்
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், யாழ்ப்பாணம்.

### புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பம்

இளைஞர், யுவதிகளின் எதிர்கால வாழ்வை வளம்படுத்துதல் என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு எமது நிறுவனத்தால் நடாத்தப்பட்டு வருகின்ற பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு புதிதாக மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பயிற்சி நெறிகள் | தகைமைகள் | பயிற்சிக் காலம் | நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| தமிழ் தட்டச்சு | ஜீ.சீ.ஈ.சாதாரண தரம் சித்தியடைந் திருத்தல் தமிழ்-C | 06 மாதம் | யாழ்ப்பாணம் (வார நாட்கள்) இணுவில் (வார இறுதி நாட்கள்) |
| ஆங்கிலத் தட்டச்சு | ஜீ.சீ.ஈ.சாதாரண தரம் சித்தியடைந்திருத்தல் ஆங்கிலம் - C | 06 மாதம் | யாழ்ப்பாணம் (வார நாட்கள்) இணுவில் (வார இறுதி நாட்கள்) |
| உடையமைத்தலும் வர்ணம் தீட்டுதலும் | ஜீ.சீ.ஈ.சாதாரண தரம் வரை கற்றிருத்தல் | 06 மாதம் | யாழ்ப்பாணம், இணுவில், சில்லாலை (வார நாட்கள்) |
| வயறிங், றீவைண்டிங் | ஜீ.சீ.ஈ.சாதாரண தரம் வரை கற்றிருத்தல் | 06 மாதம் | சில்லாலை (வார நாட்கள்) |
| தட்டச்சு, சுருக்கெழுத்து | ஜீ.சீ.ஈ.சாதாரண தரம் சித்தியடைந் திருத்தல் தமிழ்-C | 06 மாதம் | இணுவில் (வார நாட்கள்) |
| புத்தகம் கட்டுதல் | ஜீ.சீ.ஈ.சாதாரண தரம் வரை கற்றிருத்தல் | 03 மாதம் | இணுவில் (வார இறுதி நாட்கள்) |

❊ விண்ணப்பப்படிவங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
❊ விண்ணப்பமுடிவு திகதி 05.01.2003

**பயிற்சி நெறிகளுக்கு பயிற்சிக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.**

விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டிய முகவரி:
தலைவர்,
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் ,
106, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

(சி-352)

# சமஷ்டிமுறைத் தீர்வு தொடர்பாக எதிர்க்கட்சியினருக்கு விளக்கம்!

## அடுத்த மாதம் ரணில் ஆரம்பிக்கிறார்

(கொழும்பு)

சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வுமுறை தொடர்பாக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அரசாங்கம் தொடர்ச்சியான பேச்சு வார்த்தைகளை நடத்தவுள்ளது.

அடுத்த மாதம் 7ஆம் திகதி முதல் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான இந்தத் தொடர் கலந்துரையாடல்களை அரசாங்கம் ஆரம்பிக்கும். இதில் பிரதமர் ரணில் கலந்து கொண்டு விளக்கமளிக்கவுள்ளார்.

தற்போது தீர்வுக்காக முன் வைக்கப்பட்டுள்ள சமஷ்டி முறைமை தொடர்பாக இந்தக் கலந்துரையாடல்களில் முக்கியமாக ஆராயப்படும். எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சமஷ்டி தொடர்பாகக் கொண்டிருக்கும் கருத்துக்களும், தீர்வுக்காக முன்வைக்கப்படக் கூடிய சமஷ்டி முறைகளில் இடம் பெறவேண்டிய விடயங்கள் குறித்தும், எதிர்க்கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்கள் இப்பேச்சுக்களின்போது பெறப்படுவதோடு, அவை தொடர்பான பரிசீலனைகளும் மேற்கொள்ளப்படும்.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள்ஒரு சமஷ்டித் தீர்வு தொடர்பாக தீர்க்கமான முடிவுக்கு வரக் கூடியதாக இருப்பார்கள் என அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

அத்துடன், சமஷ்டி முறையான தீர்வு தனியொரு பிராந்தியத்திற்கான தீர்வாக அமையாது என்றும் நாடு முழுவதுக்குமான அரசியல் அமைப்பு மாற்றமே அமுல்படுத்தப்படும் என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

## திருமலையில் சாகித்திய விழா

(திருகோணமலை)

கடந்த ஆண்டுக்கான ஆக்கங்களுக்கான சாகித்திய விருது வழங்கும் நிகழ்வு இம்முறை திருகோணமலையில் நடைபெறுகிறது. எதிர்வரும் 28ம், 30ம் திகதிகளில் புனித சூசையப்பர் கல்லூரியில் நடைபெறும் தமிழ் இலக்கிய விழாவில் இவ் விருதுகள் வழங்கப் படவுள்ளன.

சிறந்த சிறுவர் இலக்கியத்திற்கான விருது "மரத்தடி நிழலில்" என்ற சிறுவர் உரையாடல் நூலை எழுதிய வி.என்.எஸ் உதயச்சந்திரனுக்கு வழங்கப்படுகிறது.

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை, இளைஞர் விவகார அமைச்சு இதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளது.




நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க்கை வெளியேற்றக் கோரி நேற்று முன்தினம் கொழும்பில் பிக்குகள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது "வெஸ்ட்பேர்க் சமாதானத்தின் தூதுவர் அல்ல, போரின் தூதுவர்" என எழுதப்பட்ட பதாகையுடன் பிக்குகள் காணப்படுவதை மேலேயுள்ள படத்தில் காணலாம்.

## சர்வதேச மன்னிப்புச் சபை அதிகாரி லண்டனில் பாலா, பீரிஸுடன் பேச்சு!

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான அடுத்த சுற்றுப் சமாதானப் பேச்சுக்களில் மனித உரிமைகள் தொடர்பாக ஆராயப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதன் முன்னோடி நடவடிக்கையாக- லண்டனில் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோருடன், சர்வதேச மன்னிப்புச் சபையின் முன்னாள் செயலாளர் இயன் மாட்டின் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

பேச்சுவார்த்தைகளில் மனித உரிமை விடயங்கள் தொடர்பான விடயங்களை முன்வைப்பது தொடர்பாகவே சந்திப்பு இடம்பெற்றதாக தெரியவருகின்றது.

கடந்த 16 ஆம் திகதி அமைச்சா பீரிஸைச் சந்தித்துப் பேசிய சர்வதேச மன்னிப்புச் சபை முன்னாள் செயலாளர், 18 ஆம் திகதி புலிகளின அரசியல் ஆலோசகர் பாலசிங்கத்தைச் சந்தித்து விரிவான பேச்சுக்களை நடத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் பெருமளவு முதலீடு ஜப்பானியர்கள் தீவிர ஆர்வம்!

(கொழும்பு)

இலங்கையில் அடுத்த வருடம் 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஜப்பான் முதலீடு செய்யவுள்ளதாக, முதலீட்டுச் சபைத் தலைவர் அர்ஜுன மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

சமாதானச் சூழநிலையில் இலங்கையில் ஜப்பானிய முதலீடுகள் அதிகரிக்க ஆரம்பித்துள்ளன. இதன் ஒருகட்டமாக அடுத்த வருடத்தில் ஜப்பானிய முதலீட்டாளர்கள் இலங்கையின் தொழில் முயற்சிகளில் 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்யவுள்ளனர்.

இத்தொகை 2006 ஆம் ஆண்டில் 500 மில்லியன் டொலர்களாக அதிகரிக்கும் என்றும் முதலீட்டுச் சபைத் தலைவர் அர்ஜுன் மகேந்திரன் மேலும் தெரிவித்துள்ளார்.



புன்னாலைக்கட்டுவன் கணேச சனசமூகநிலையக் கட்டடத்திறப்பு விழாவும் மலர் வெளியீட்டு வைபவமும் அண்மையில் இடம்பெற்றது. மேற்படி நிகழ்வில் விடுதலைப்புலிகளின் உடுவில் கோட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் நிலான் சிறப்புப்பிரதி பெறுவதை மேலேயுள்ள படத்தில் காணலாம். (96)

## களுத்துறைத் தமிழ்ச் சிறைக்கைதிகள் அடுத்த வாரம் முதல் உண்ணாவிரதம்!

(கொழும்பு)

வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்படாமல் ஏழு, எட்டு வருடங்களாக களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 78 தமிழ் அரசியற்கைதிகள் தமது விடுதலைக்கு நடவடிக்கை எடுக்கக்கோரி சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இக் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளது தொடர்பாக இ.தொ.கா. உப தலைவர் எம்.எஸ். செலலச்சாமி கருத்துத் தெரிவிக்கையில்,

அரசியல்வாதிகளும் கட்சிகளும் கடந்தகாலங்களைப்போல பொய் வாக்குறுதிகளைச் கொடுக்க வேண்டாம் எனவும்,

சட்டமா அதிபர் திணைக்களம் குழுக்கள் அமைத்து இப்பிரச்சினைக்கு தீர்வு காணலாம் எனக் கூறிக் கொண்டிருப்பதில் எவ்வித பயனும் இல்லை என்றும்,

ஆறுமாத காலத்திற்குள் வழக்குகளைத் தாக்கல் செய்து முடிக்க வேண்டும். இல்லையேல் நிலைமை மோசமாகி விடும் எனவும் தெரிவித்தார்.

## கையடக்கத் தொலைபேசிகளின் பாவனை வேகமாக உயர்வு!

(கொழும்பு)

இலங்கையில், கையடக்கத் தொலைபேசிகளின் பாவனை வேகமாக அதிகரித்து வருவதாக சிறிலங்கா ரெலிகொம் நிறுவனம் நடத்திய ஆய்வில் இருந்து தெரியவந்துள்ளது.

மக்கள் மத்தியில் கையடக்கத் தொலைபேசிகள் வெகுவாகப் பிரபலமடைந்துள்ளன. இதனைப் பயன்படுத்துவோரின் தொகை நாளாந்தம் வேகமாக அதிகரித்து வருகின்றது.

கேபிள் தொலைபேசி இணைப்புகளைப் பெறுவதற்கு நீண்ட காலம் காத்திருக்க வேண்டியுள்ளதால், அநேகமானோர்- கையடக்கத் தொலைபேசிகளைச் சந்தைப்படுத்துவதில் ஆர்வம் காட்டி வருகின்றார்.

கடந்த வருட இறுதியில் ரெலிகொம் நடத்திய ஆய்வுகளில், நாட்டில் மொத்தம் ஆறு இலட்சத்து 70 ஆயிரம் கையடக்கத் தொலைபேசிகள் பாவனையில் இருந்ததாகத் தெரியவந்துள்ளது. இதே வேளை- இவ்வருடம் இத்தொகை கணிசமாக உயரும் என்றும், இதற்கு தற்போது நாட்டின் வடக்குப் பகுதி உட்பட பல்வேறு இடங்களுக்கு கையடக்கத் தொலைபேசி வசதிகள் செய்யப்பட்டுள்ளதும் ஒரு காரணம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## குடாநாட்டுக் கைத்தொழிலாளருக்கு ஜி.ரி.இசற் தொழிற் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

ஜேர்மன் தொழிநுட்பநிறுவனத்தின் உதவியுடன் யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள கைத்தொழிலாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

யாழ.பல்கலைக்கழகத்துடன் இணைந்ததாக, இந்தப் பயிற்சித் திட்டத்தை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் நடைமுறைப்படுத்தவுள்ளது. அடுத்தமாதம் குடாநாட்டைச் சேர்ந்த 60 கைத்தொழிலாளர்கள் இந்தப் பயிற்சியைப் பெறவுள்ளனர் என கைத்தொழில் அதிகாரச்சபைத் தலைவர் பந்துல பெரேரா தெரிவித்தார்.

## புலிகளுக்கு வானொலி உபகரணங்கள் நாசகார சக்திகள் சுயலாபம் பெறுவதற்கு முயற்சிக்கின்றன!

### அமைச்சர் பீரிஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வானொலி உபகரணங்கள் இறக்குமதி செய்யப்பட்டது தொடர்பான சகல விபரங்களையும் அரசாங்கம் வெளிப்படுத்தும் என அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இன்னும் சில தினங்களில் அரசாங்கம் உத்தியோகபூர்வமான அறிக்கையை விடுக்கும் என கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் அறிவித்தார்.

இந்த விடயத்தில் எந்தவிதமான சட்டவிரோத நடவடிக்கைகளும் இடம்பெற்றிருக்கவில்லை.

ஆனால், சில நாசகார சக்திகள் இந்த விவகாரத்தை வைத்து சுயலாபமீட்ட முற்படுவதாகவும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

## அரசாங்க நிர்வாக ஊழல்கள் விசாரிக்க சர்வதேச அமைப்பு!

(கொழும்பு)

பாரிய ஊழல்கள, மோசடிகள் நிகழும் நிறுவனங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்கு 'ட்ரான்ஸ்பரன்சி இன்ரநஷனல்' என்ற சர்வதேச அமைப்பு தயாராகி வருகிறது.

ஆரம்பக்கட்டமாக முப்படைகள் மற்றும் சுங்கத்திணைக்களம், குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் போன்றவற்றில் இடம்பெற்றுள்ள ஊழல்கள், மோசடிகள் குறித்து விசாரணை நடத்த இருப்பதாக அதன் இலங்கைக் கிளைக்குப் பொறுப்பான நிறைவேற்றுப் பணிப்பாளர் தெரிவித்தார்.

# இனந்தெரியாத காய்ச்சல் சுதுமலை வாசி மரணம்!

## நூற்றுக்கணக்கான நோயாளர்கள் வைத்தியசாலைகளில்

இனங்காணப்படாத காய்ச்சலினால் ஐந்து நாட்களாகப் பீடிக்கப்பட்டிருந்த சுதுமலைவாசி ஒருவர், நேற்றுக்காலை யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

சுதுமலையைச் சேர்ந்த செல்லதுரை சிவசுப்பிரமணியம் என்ற 55 வயதானவரே ஐந்து நாட்களாக காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு, யாழ். போதனாவைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார். இனம் காணப்படாத வைரஸ் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்த இவர், சிகிச்சை பயனின்றி நேற்றுக்காலை உயிரிழந்தார்.

இதேவேளை, யாழ்.குடாநாட்டில் பருவமழையை அடுத்து கடும் குளிருடன் கூடிய காலநிலை நிலவிவருவதால், இனந்தெரியாத வைரஸ் காய்ச்சல் வேகமாகப் பரவிவருகின்றது. இதனால், தினமும் நூற்றுக்கணக்கானவர்கள் பாதிக்கப்பட்ட நிலையில், குடாநாட்டிலுள்ள வைத்தியசாலைகளுக்குப் படையெடுத்து வருகின்றனர்.

இதனால், வைத்தியசாலைகளில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. இதேவேளை, தொற்று நோய்கள் வேகமாகப் பரவி வருவதால் பொதுமக்கள் அவதானமாக இருக்கும்படியும் சுகாதார விதிகளைக் கடைப்பிடிக்குமாறும் சுகாதார அதிகாரிகள் வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (60)

# ஊரெழு - கரந்தன் வீதியில் எலும்புகளால் துர்நாற்றம்

(ஊரெழு)

ஊரெழு - கரந்தன் வீதியில் கால்நடை இறைச்சி விற்பவர்கள், கால்நடை எலும்புகளை அந்த இடத்திலேயே போடுவதினால், இவ்வீதியால் போக்குவரத்துச் செய்யும் பொதுமக்கள் பலத்த அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகிறார்கள்.

இவ்எலும்புகளால் துர்நாற்றம் வீசுவதோடு, தொற்று நோய்கள் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனால் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்ததோடு, சுற்றுச்சூழல் மாசடைந்து வருகின்றது என்றும் பலர் கவலை கொண்டுள்ளனர். (96)

# தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்பு நடைமுறைகள்

தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளளிப்பு நடைமுறைகள் விடுதலைப்புலிகளின் நிதித்துறையால் வெளியிடப்பட்டுள்ளன.

● மீளளிப்பிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் கடன் சான்றிதழை வைத்திருப்பவர்களுக்கான, மீளளிப்பு முதற் கட்டமாக நடைபெறும். நேரமும் மீளளிக்கப்படும் இடமும் பின்னர் அறிவிக்கப்படும். கடன் சான்றிதழைத் தவறவிட்டவர்களுக்கான மீளளிப்பு இரண்டாம் கட்டமாக நடைபெறும்.

இது தொடர்பான நடைமுறைகள் பின்னர் அறிவிக்கப்படும். இதனை அருள்கூர்ந்து கருத்திற்கொண்டு எம்முடன் ஒத்துழைக்குமாறு கடன்சான்றிதழைத் தவறவிட்டவர்களைப் பணிவன்புடன் வேண்டுகின்றோம் என நிதித்துறையினர் அறிவித்துள்ளனர்.

- கடன் சான்றிதழாளர் நேரடியாக வருகைதந்து கடனை மீளப்பெற வேண்டும்.

- ஒருவர் சார்பில் மற்றொருவர் கடனைச் செலுத்தியிருப்பின் இருவரும் வருகைதரவேண்டும்.

- கடன்சான்றிதழாளர் இறந்திருப்பின் பின்வரும் ஆவணங்களைப் பின்னுரித்தாளர் கொண்டு வர வேண்டும்.

இறப்புச்சான்றிதழ், இறப்புச்சான்றிதழின் படி (பிரதி), கடன் சான்றிதழ்,பின்னுரித்தாளரின் அடையாள ஆவணம்,பின்னுரித்தாளரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவையாளரின் கடிதம்

- கடன் சான்றிதழிலுள்ள முழுப்பெயரும் அடையாள ஆவணத்திலுள்ள முழுப்பெயரும் வேறுபடுமிடத்து இரண்டு பெயர்களும் ஒருவரையே குறிக்கின்றதென்பதை உறுதிப்படுத்தி கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட கடிதம்.

மீளளிப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கடன்சான்றிதழாளர் தமது அடையாள ஆவணத்தைக் காண்பித்தே கடனை மீளப்பெறமுடியும்

அடையாள ஆவணம் அற்றவர் தமது புகைப்படத்தை (2.5 அங் x 2.0 அங் அளவு) அதன் பின்புறத்தில் தமது பெயர், முகவரி, கையொப்பம் ஆகியவற்றை உதவி அரசாங்க அதிபரால் உறுதிப்படுத்திக் கையளிப்பின் அது ஏற்றுக்கொள்ளப்படும். இவ்வாறு செய்யமுடியாதவர்களுக்கான மீளளிப்பு, கடன் சான்றிதழைத் தவறவிட்டவர்களுக்கான இரண்டாம் கட்ட மீளளிப்பின்போது மேற்கொள்ளப்படும். இது பற்றிய நடைமுறை பின்னர் அறிவிக்கப்படும்.

# வரும் தைப்பொங்கல் தினத்துடன் வட்டுக்கோட்டையில் புதிய சந்தை

(மானிப்பாய்)

வட்டுக்கோட்டைப் பகுதி மக்களின் நன்மை கருதி நிரந்தரமாக பொதுச் சந்தையொன்றினைக் கட்டுவதற்கு வலிகாமம் மேற்கு பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி- வட்டுக்கோட்டை உப அலுவலகத்துக்குப் பின்னாலுள்ள காணி ஒன்றினைக் கொள்வனவு செய்து, புதிய கட்டடம் கட்டுவதற்குப் பிரதேசசபை நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக பிரதேச சபைத் தலைவர் தெரிவித்தார்.

வசதியற்ற நிலையில் தனியார் காணியொன்றில் முன்னைய சந்தை இயங்கி வந்ததென்றும், புதிய இடத்தில் சந்தை இயங்கத் தொடங்கும் பட்சத்தில் பயனாளிகளின் சிரமங்கள் தவிர்க்கப்புடுமெனவும்,

எதிர்வரும் தைப்பொங்கலோடு மேற்படி சந்தையின் வேலைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (100)

### கணினிக் கல்விக்கு விண்ணப்பிக்கலாம்

இணுவில் பொதுநூலகக் கணினிப் பிரிவினர், 2002 க.பொ.த. சாதாரணப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களின் நன்மைகருதி கணினிக் கற்கை நெறியை ஆரம்பிக்க இருப்பதால், அதில் பயிலவிரும்பும் மாணவர்கள் தமது பெயர் விபரங்களை நூலகக் கணினிப் பிரிவில் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

### திடீரெனத் தீப்பற்றிய மோட்டார் சைக்கிள்

ஆரியகுளம் சந்திக்கு அண்மையில் வீதியால் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று நேற்று திடீரெனத் தீப்பற்றி எரிந்தது.

ஐந்து நிமிடங்கள் எரிந்தவண்ணம் இருந்த மோட்டார் சைக்கிளின் ஒரு பகுதி சேதமடைந்தது. (28)

# சிவாஜிலிங்கம், மாவை நெடுந்தீவுக்கு விஜயம்

(நெடுந்தீவு)

தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், மாவை சேனாதிராஜா ஆகியோர் நேற்றுக்காலை பதினொரு மணியளவில் நெடுந்தீவிற்கு விஜயம் செய்தனர்.

ஈ.பி.டி.பியினரை வெளியேறுமாறு கோரி நடாத்தப்படுகின்ற போராட்டத்தை முன்னெடுக்கும் நெடுந்தீவு மக்கள் ஒன்றியப் பிரதிநிதிகளை அவர்கள் சந்தித்தனர். நெடுந்தீவு கூட்டுறவுச்சங்கக் கட்டடத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது.

ஈ.பி.டி.பியினரின் எண்ணிக்கை நெடுந்தீவில் தற்போது குறைந்துள்ளதையும், போராட்டம் நிறுத்தப்பட்டால் கடற்படையினர் அங்கிருக்க வேண்டிய தேவையிராது என பிரதமர் ரணில் கூறியிருப்பதையும் காரணம் காட்டி போராட்டத்தைத் தணிக்குமாறு அவர்கள் கோரினர்.

ஆனால்- முற்றுமுழுதாக ஈ.பி.டி.பியினர் வெளியேறும்வரை போராட்டம் தொடருமென மக்கள் அவர்களிடம் தெரிவித்தனர். (113)

### வலுவிழந்தோருக்கு இலவச முச்சக்கர வண்டிகள்

(திருநெல்வேலி)

திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகம், எதிர்வரும் 29 ஆம் திகதி காலை 10 மணியளவில், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலாசார மணடபத்தில், யாழ். மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்ந்து கொண்டிருக்கும் வலுவிழந்த மக்களுக்கு இலவச முச்சக்கரவண்டி வழங்கும் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளது.

இத்திட்டத்தின் முதல் கட்டமாக தெரிவுசெய்யப்பட்ட 10 வலுவிழந்தவர்களுக்கு அன்றையதினம் இலவசமாக முச்சக்கரவண்டிகள் வழங்கப்படவுள்ளன.

# புன்னாலைக்கட்டுவன் வடக்கில் விமானப் பயணிகளுக்குத் தரிப்பிடம்

(புன்னாலைக்கட்டுவன்)

மக்கள் மீளக்குடியமர அனுமதி மறுக்கப்பட்ட புன்னாலைக்கட்டுவன் வடக்குப் பிரதேசத்தில், விமானப்பயணிகளை ஏற்றுவதற்கு தரிப்பிடம் ஒன்றை இராணுவத்தினர் தயார் செய்து வருகின்றனர்.

புன்னாலைக்கட்டுவன் வடக்குச் சந்தியிலிருந்து, வடக்குப்பக்கமாக சுமார் 250 மீற்றர் தூரத்தில் சேதங்களற்ற நிலையில் உள்ள வீடும் அதன் சுற்றுப்புறமும் இதற்கெனப் புல்டோசர் கொண்டு துப்பரவு செய்யப்பட்டுள்ளது.

அப்பகுதியில் வீடுகளைப் புனரமைப்புச் செய்வதனையும், விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதனையும் தடுத்து நிறுத்திவிட்டு, இராணுவத்தினர் இச்செயற்பாட்டில் ஈடுபடுவது மக்களை வியப்படையச் செய்துள்ளது. (83)

### எயிட்ஸ் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஏற்பாட்டில்- எயிட்ஸ் நோய் தொடர்பான கருத்தரங்கு-

28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணியள வில் கழக மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

இக்கருத்தரங்கில் வட மத்திய மாகாண பொதுச்சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.பாலித பண்டார கருத்துரை வழங்கவுள்ளார்.

# நெடுங்கேணி விவசாயிகளுக்கு 9 லட்சம் ரூபா நிதியுதவி

(சரசாலை)

வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பிரதேசசெயலர் பிரிவில் நெற்செய்கை மேற்கொள்ள நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

நெடுங்கேணிப் பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட 6 கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள விவசாயிகள் நெற்செய்கை மேற்கொள்ளவென 9 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 15 பேருக்கு தையல் இயந்திரங்கள் கிராம சேவையாளரூடாக வழங்கப்பட்டுள்ளன. (34)

### மன்னாரில் போராட்ட வரலாற்றுக் கண்காட்சி

(வவுனியா நிருபர்)

மன்னார் திருக்குடும்பக் கன்னியார் மடப் பாடசாலையில், போராட்ட வரலாற்றுப் புகைப்படக் கண்காட்சி நேற்றுமுதல் இடம்பெற்று வருகின்றது. மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில், இப்புகைப்படக் கண்காட்சிக்கான ஒழுங்குகளை வவுனியா வளாக மாணவர்கள் செய்துள்ளனர்.

# மட்டக்களப்பில் தொடர்பகம்

மட்டு - அம்பாறை மாவட்டத்தின விபரங்களைத் திரட்டும் தொடர்பகம் நேற்று முன்தினம் கல்லடி பிரதான வீதியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மட்டு - அம்பாறை மாவட்டத்தில் தற்போது வசிக்கின்ற மற்றும் புலம்பெயர்ந்த மக்களின் விபரங்கள் தொடர்பாகவும், ஏனைய விபரங்களையும் திரட்டும் நோக்கில் விபரங்கள் திரட்டும் தொடர்பகம் செயற்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (06)

## வாழ்க வளமுடன்

### நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

மூன்றாவது அகவையில். HAPPY BIRTHDAY



பெயர்:வே.கிருஷ்ணகிஷோர்
முகவரி: ஐயனார் கோவிலடி, சுன்னாகம்.



நான்காவது அகவையில்.

பெயர் : வே.பொன்மகள்
முகவரி: ஐயனார் கோவிலடி, சுன்னாகம்.



எட்டாவது அகவையில்.





பெயர் : கு.கீர்த்தனா
முகவரி: முடக்காடு, நெல்லியடி கிழக்கு.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி:------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------------
பெற்றார் ஒப்பம்

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

## தோற்றும் மாணவர்களுக்கான முன் ஆயத்தப் பயிற்சிகள்





## மாணவர் மலர்

### வினாப்பத்திரம் I (PAPER I)

☞ மொழிபெயர்ப்பு (TRANSLATION)

✹ கீழே தரப்பட்டுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

தரம் ஐந்தின் முதலாம் தவணைப்பரீட்சைக்குத் தோற்றிய நான்கு பிள்ளைகள் 5 பாடங்களில் பெற்ற புள்ளிகளைக் கீழே உள்ள அட்டவணை காட்டுகின்றது. நான்கு பிள்ளைகளும் 5 பாடங்களிலும் பெற்ற புள்ளிகள் குறியீடுகள் மூலம் காட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு குறியீட்டு உருவத்திற்கும் உரிய புள்ளிகள் கீழே தரப்பட்டுள்ளன.




1. ஆகக்கூடிய மொத்தப் புள்ளிகளைப் பெற்றவர் யார்?
   (1) ரூபன் (2) செந்தாமரை (3) ஜனனி (...........)
2. 4 பிள்ளைகளும் பெற்ற புள்ளிகளில் ஆகக்கூடிய மொத்தப் புள்ளிகள் எந்தப் பாடத்திற்குப் பெறப்பட்டது?
   (1) பாடம் 5 இற்கு (2) பாடம் 4 இற்கு (3) பாடம் 2 இற்கு (...........)
3. இரு பாடங்களுக்கு 100 வீதம் புள்ளிகள் பெற்ற இரு பிள்ளைகள் யாவர்?
   (1) ரூபன், செந்தாமரை (2) செந்தாமரை, ஜனனி (3) ஜனனி, திலீபன் (...........)

☞ தொடர்புகளை இனங்காணல் (SEEING RELATIONSHIPS)

✹ கீழ்வரும் வினாக்களிலுள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான உருவை வலது பக்கத்தில் தரப்பட்டுள்ள உருக்களில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

1.




2.




☞ எதிர்வு கூறல் (PREDICTION)

✹ பின்வரும் பகுதியை வாசித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தினைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

> உங்கள் அனைவரதும் சுகம் அறிய ஆவலோடு காத்திருக்கின்றேன். நான் இங்கு வந்து இப்போது ஏறக்குறைய இரண்டு மாதங்களாகி விட்டன. தங்குமிட விடுதியில் உணவு பரவாயில்லை. எனினும் வீட்டை விட்டுத் தூரஇடத்தில் வாழ்வது கவலை தான். மாலைநேரத்தில் ஏனைய பிள்ளைகள் விளையாடப் போனாலும் நான் அதிக நேரம் புத்தகங்களைப் படிப்பதிலேயே செலவிடுகின்றேன்.

1. இக்கடிதத்தை எழுதியவர் இப்போது இருப்பது வெளிநாட்டிலாகும்.
   (1) ஆம் (2) இல்லை (3) சொல்ல முடியாது (..................)
2. இக்கடிதம் அவரது வீட்டிலுள்ள ஒருவருக்கே எழுதப்பட்டுள்ளது.
   (1) ஆம் (2) இல்லை (3) சொல்ல முடியாது (..................)
3. இக்கடிதத்தை எழுதியவர் கல்விக்காக வீட்டைவிட்டு வேறிடத்தில் வசிப்பவராவார்.
   (1) ஆம் (2) இல்லை (3) சொல்ல முடியாது (..................)

☞ பிரசினங்களைத் தீர்த்தல் (PROBLEM SOLVING)

✹ கீழே உள்ள வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

1. சரவணனுக்கு இப்போது வயது 9 ஆண்டுகளாக இருக்கும்போது, சமீனின் வயது 13 ஆண்டுகளாகும். சமீனின் வயது, சரவணனின் வயதை விட இருமடங்காக இருந்தபோது, சமீனின் வயது எத்தனை ஆண்டுகளாகும்?
   (1) 4 ஆண்டுகள் (2) 6 ஆண்டுகள் (3) 8 ஆண்டுகள்
2. சரவணனின் வயதை விட, சமீனின் வயது மூன்று மடங்காக இருந்தபோது சரவணனின் வயது எத்தனை ஆண்டுகளாகும்?
   (1) 2 ஆண்டுகள் (2) 4 ஆண்டுகள் (3) 6 ஆண்டுகள்

☞ தகவல்களின் ஒழுங்கமைப்பு (ORGANISATION OF INFORMATION)

✹ கீழே தரப்பட்டுள்ள வினாவில் ஒரு சம்பவம் தொடர்பான உரையாடலின் ஒழுங்கு மாறுபட்டுக் காணப்படுகின்றது. இந்த உரையாடல்களை ஒழுங்குமுறைப்படி திருத்தமாகக் குறிப்பிடும் விடையின் கீழ்க் கோடிடுக.

1. ஒரு குழந்தை சுகவீனமுற்ற போது அவனுக்கு மருந்து எடுத்துவந்து கொடுத்த சந்தர்ப்பத்தில் நிகழ்ந்த உரையாடல்
   A. மகனை விரைவாக வைத்தியரிடம் அழைத்துச் செல்வோம்.
   B. பிள்ளைக்கு நல்ல காய்ச்சல். இம் மருந்தைக் கொடுங்கள் விரைவில் குணம் அடையலாம்.
   C. இப்போது உடல் நடுங்குதல் சிறிது குறைந்துள்ளது.
   D. கசப்பு ஆனாலும் பரவாயில்லை மருந்து முழுவதையும் குடி.
   E. மகனுக்கு காய்ச்சல் போலுள்ளது.

   (1) ADCEB (2) EABDC (3) BDEAC

☞ கோலங்களின் புலக்காட்சி (PERCEPTION)

✹ கீழேயுள்ள வினாவில் காணப்படும் உருவின் வெற்றிடத்திற்குப் பொருத்தமான பகுதியை அதற்கு அருகில் உள்ள மூன்று உருக்களில் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1.




☞ வெளித் தொடர்புகளை இனங்காணல் (SEEING SPATIAL RELATIONSHIPS)

✹ கீழே தரப்பட்டுள்ள வினாக்களில் காணப்படுவன முகம் பார்க்கும் கண்ணாடியில் தெரியும் இரண்டு கடிகார முகங்களாகும். ஒவ்வொன்றிலும் காட்டப்படும் சரியான நேரம் எதுவெனத் தெரிந்து அதற்குரிய இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.



1. பி.ப. 5.00
2. பி.ப. 7.00
3. பி.ப. 12.25



1. பி.ப. 1.25
2. பி.ப. 4.05
3. பி.ப. 7.55

☞ அறிவுறுத்தலைப் பின்பற்றுதல் (FOLLOWING INSTRUCTIONS)

✹ கீழே தரப்பட்டுள்ள விடயம் பற்றி மூன்றுக்கு மேற்பட்ட சொற்கள் கொண்ட நான்கு வாக்கியங்கள் எழுதுங்கள்



**அறிவுறுத்தல்**

*படம் பார்த்து வாக்கியங்கள் எழுதும் போது நிகழ்காலத்திலேயே எழுதுதல் வேண்டும். மாணவர்கள் சித்தியடையத்தவறுவதற்கு காரணம், கற்பிப்போர் கற்பித்தல் நுணுக்கங்களை அறியாது கற்பிக்கின்றமையேயாகும்.*

(தொடரும்)

வி.என்.எஸ்.உதயச்சந்திரன்
B.A. (Cey) B,Ed(Hons) Dip.in.Ed.
(ஆசிரியர், கொழும்பு விவேகானந்தாக் கல்லூரி)

## உங்கள் அபிப்பிராயங்கள் எமக்குத் தேவை

**அன்பார்ந்த பெற்றோர்களே!**

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பாகத் தற்போது நாம் வெளியிட்டுவரும் மாதிரி வினாத்தாள் வழிகாட்டல் குறிப்பு தொடர்பாக உங்களிடமிருந்து அபிப்பிராயங்களையும் ஆலோசனைகளையும் எதிர்பார்க் கின்றோம்.

உங்கள் ஆலோசனைகளை, அபிப்பிராயங்களை
**மாணவர் மலர்,**
**நமது ஈழநாடு,**
**267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்**
என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்

*- பொறுப்பாசிரியர்.*



# க.பொ.த. உயர்தரம்

## நிதி முகாமை



1. நிதி முகாமை என்பது யாது?
நிறுவனம் ஒன்றுக்குப் பொருத்தமான வளங்களின் மூலம் தேவையான நிதியினைத் திரட்டிக்கொள்வதன் மூலம் அவ்நிதியை வினைத்திறனான முதலீடுகளில் ஈடுபடுத்துவதுமான அனைத்துச் செயற்பாடுகளையும் நிதி முகாமை என்பர்.

2. நிதி முகாமையின் தொழிற்பாடுகள் யாவை?
   * மூலதனக் கட்டமைப்பை உருவாக்குதல்.
   * இலகு நிபந்தனை குறைந்த கிரயங்களில் நிதி திரட்டுதல்.
   * இலாபகரமாக சிறந்த வினைத்திறனான திட்டங்களில் நிதியைப் பயன்படுத்துதல்.
   * நிதி நெருக்கடிகளை முன்மதிப்பீடு செய்து அதனைத் தவிர்க்க நடவடிக்கை எடுத்தல்.
   * முக்கியத்துவங்களுக்கு ஏற்ப வரையறுக்கப்பட்ட நிதியினை ஒதுக்கீடு செய்தல்.

3. மூலதனக் கட்டமைப்பு என்பது யாது?
நிறுவனம் ஒன்றின் உரிமை மூலதனத்துக்கும் கடன் மூலதனத்துக்கும் இடையிலான தொடர்பினையே மூலதன இணைப்பு என்பர். அதாவது - நிறுவனத்தின் நீண்டகால நிலையான மூலதனம் எவ்வாறு திரட்டப்பட்டுள்ளது என்பதனை வெளிப்படுத்துவதே இதுவாகும்.

4. உயர் மூலதன இணைப்பு என்பது யாது?
நிறுவனம் ஒன்றின் மூலதன இணைப்பில் கடன் மூலதனத்தின் பங்கு அதிகமானதாகவும், உரிமை மூலதனத்தின் பங்கு குறைவாகவும் காணப்படுமாயின் உயர் மூலதன இணைப்பு என்பர்.

5. உயர் மூலதன இணைப்பு எச்சந்தர்ப்பங்களில் விரும்பப்படும்?
   * இலாபம் ஒப்பீட்டுரீதியில் அதிகமாகக் காணப்படும்போது.
   * கடனுக்கான வட்டி குறைவாகக் காணப்படும்போது.
   * கடன்களை குறைந்த நிபந்தனையுடன் இலகுவாகத் திரட்டக் கூடியதாக உள்ளபோது.
   * உரிமை முதலைத் திரட்டமுடியாதபோது.

6. தாழ் மூலதன இணைப்பு என்பது யாது?
நிறுவனம் ஒன்றின் மூலதன இணைப்பில் உரிமை மூலதனத்தின் பங்கு அதிகமானதாகவும், கடன் மூலதனத்தின் பங்கு குறைவானதாகவும் காணப்படுமாயின் - அதனை தாழ் மூலதன இணைப்பு என்பர்.

7. தாழ் மூலதன இணைப்பு எச்சந்தர்ப்பங்களில் விரும்பப்படும்?
   * இலாபம் ஒப்பீட்டுரீதியில் குறைவாகக் காணப்படும் போது.
   * கடனுக்கான வட்டி நிபந்தனைகள் அதிகமாகக் காணப்படும்போது.
   * கடனைத் திரட்டுவது கடினமானதாகக் காணப்படும் போது.
   * வட்டிச் செலவுகளை நிறுவனம் கட்டுப்படுத்த தீர்மானிக்கும்போது.

8. மிகை மூலதனம் என்பது யாது?
நிறுவனம் ஒன்றின் வினைத்திறனான செயற்பாட்டுக்கு வரவேண்டிய மூலதனத் தேவையிலும் பார்க்க அதிகளவான மூலதனம் காணப்படுமாயின் அதனையே மிகை மூலதனம் என்பர்.

9. மிகை மூலதனத்தினால் ஏற்படும் பாதிப்புக்கள் யாவை?
   * வட்டி, பங்கு இலாபங்கள் போன்ற செலவுகள் அதிகரிக்கும்போது.
   * நிதிச் சிக்கனங்களைப் பேணமுடியாது.
   * மூலதன முடக்கம் காணப்படும்.
   * திறனற்ற நிதி முகாமை ஏற்பட வழிவகுக்கும்.

10. குறை மூலதனவாக்கம் என்பது யாது?
நிறுவனம் ஒன்றின் வினைத்திறனான செயற்பாட்டுக்கு வேண்டிய மூலதனத்திலும் பார்க்க, குறைந்தளவான மூலதனம் காணப்படுமாயின் குறை மூலதனவாக்கம் என்பர்.

11. குறை மூலதனவாக்கத்தால் ஏற்படும் பாதிப்பு யாது?
   * உற்பத்தி விற்பனைகள் தடைப்படலாம்.
   * வட்டி, பங்கு இலாபம் போன்ற கொடுப்பனவுகளை உரியகாலத்தில் மேற்கொள்ளமுடியாது.
   * நடைமுறைச் செலவுகளை மேற்கொள்ளமுடியாது.
   * முக்கிய தேவைகளுக்கு நிதியை ஒதுக்கீடு செய்ய முடியாது.
   * திறனற்ற நிதி முகாமை ஏற்பட வழிவகுக்கும்.

12. நிதி மூலங்கள் என்பது யாது?
நிறுவனமொன்றுக்கான நிதி எவ்வாறான காரணிகள் மூலம் உட்பாய்ச்சப்படுகின்றதோ அல்லது பெற்றுக் கொள்ளப்படுகின்றதோ அவை அனைத்தையும் நிதி மூலங்கள் என்பர்.

13. நிறுவனமொன்றின் நிதி மூலங்கள் யாவை?
   * பங்கு வழங்கல்
   * தொகுதிக்கடன்
   * வங்கிக்கடன்
   * ஏனைய குறுங்காலக் கடன்கள்
   * நிறுத்தி வைத்த இலாபம்
   * தேய்மான ஏற்பாடுகள்
   * மேலதிக சொத்து விற்பனை

14. அகநிதி மூலம் என்பது யாது?
நிறுவனமொன்றுக்கு எவ்வாறான காரணிகள் மூலம் நிதியானது உள்வாரியாகத் திரட்டப்படுகின்றதோ அக்காரணிகள் அனைத்தையும் அகநிதி மூலம் என்பர்.
*உதாரணம்:* நிறுத்தி வைத்த இலாபம், மேலதிக சொத்து விற்பனை, தேய்மான ஏற்பாடுகள்.

15. அகநிதி மூலதனத்தினால் ஏற்படும் அனுகூலங்கள் யாவை?
   * வட்டி, பங்கு இலாபங்கள் செலுத்தத்தேவையில்லை.
   * விரைவாகவும், சுலபமாகவும் திரட்டலாம்.
   * மீளச்செலுத்த வேண்டிய அவசியம் இல்லை.

16. புறநிதி மூலம் என்பது யாது?
நிறுவனமொன்றுக்கு தேவையான நிதியானது எவ்வாறான காரணிகளின் ஊடாக உட்பாய்ச்சப் படுகின்றதோ அக்காரணிகள் அனைத்தும் புறநிதி மூலம் என்பர்.
*உதாரணம்:* பங்கு வழங்கல், தொகுதிக்கடன், குறுங்காலக்கடன்கள்

17. நிதிப்பிரயோகம் என்பது யாது?
நிறுவனம் ஒன்றிலிருந்து நிதியானது எவ்வாறான தேவைகளுக்காக வெளிப்பாய்ச்சப்படுகின்றதோ அவையனைத்தையும் நிதிப்பிரயோகம் என்பர்.
*உதாரணம்:* நிலையான சொத்துக் கொள்வனவு.
தொழிற்படு முதற்தேவைகள்.
வெளிமுதலீடுகள்.

18. காசுப்பாதீடு என்பது யாது?
நிறுவனம் ஒன்று குறிப்பிட்ட வரையறையான எதிர்காலத்திற்கு, நிறுவனம் பெறுவதற்கு என எதிர்பார்க்கும் காசு, செலுத்துவதற்கென எதிர்பார்க்கும் காசு என வேறுபடுத்தித் தயாரிப்பதே காசுப்பாதீடு ஆகும். இதில் பின்வரும் தகவல்கள் வெளிப்படுத்தப்படும்.
   * காசு நிலுவைகள்
   * காசு மிகைகள்
   * காசுப் பற்றாக்குறைகள்

19. காசுப்பாதீடு ஒன்றைத் தயாரிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் அனுகூலங்கள் யாவை?
   * ஒவ்வொரு பிரிவினதும் காசுத்தேவையை மதிப்பிடுதல்.
   * காசு மிகையை முன்னரே அறிந்து முதலீட்டுத் திட்டங்களைத் தீர்மானித்தல்.
   * காசுப்பற்றாக்குறையை முன்னரே அறிந்து குறைந்த கிரயத்தில் காசினைத் திரட்ட நடவடிக்கையினை மேற்கொள்ளல்.
   * காசுக்கட்டுப்பாட்டை இலகுவாக மேற்கொள்ளமுடிதல்.

20. காசுப்பாய்ச்சற் கூற்று என்பது யாது?
குறிப்பிட்ட ஓர் காலப்பகுதியில் வியாபாரம் ஒன்றில் காசு உட்பாய்ச்சப்பட்ட முறையினையும், காசு வெளிப்பாய்ச் சப்பட்ட முறையினையும் சீராக்கம் செய்து, இறுதிக் காசு மீதியைக் கண்டறிவதற்காக தயாரிக்கப்படும் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்றாகும்.

21. காசுப்பாய்ச்சற் கூற்று தயாரிப்பதன் நோக்கங்கள் யாவை?
   * காசு சம்பந்தமான திட்டமிடல்களை மேற்கொள்ள.
   * காசு சம்பந்தமான கட்டுப்பாடுகளை மேற்கொள்ள.
   * காசு மிகை காணப்படுமாயின் அதற்கான முதலீட்டு வழிகளைத் தீர்மானிக்க
   * காசுப்பற்றாக்குறை காணப்படுமாயின் நிதி திரட்டும் நடவடிக்கைகளை மேற்கொள்ள.
   * இறுதிக் காசுமீதியை அறிந்து கொள்ள.

22. நிதிப்பாய்ச்சற் கூற்று என்பது யாது?
வியாபாரம் ஒன்றில் நிதி உட்பாய்ச்சல்களையும், நிதி வெளிப்பாய்ச்சல்களையும் சீராக்கம் செய்து தயாரிக்கும் கூற்று நிதிப்பாய்ச்சல் கூற்றாகும்.

23. நிதிக்கூற்றுக்கள் என்பது யாது?
நிறுவனத்தின் நாளாந்த செயற்பாடுகளினால் நிகழக்கூடிய பல்வேறு கொடுக்கல் வாங்கல்களை முறையாக ஏடுகளில் பதிவு செய்து அவைமூலம் பல்வேறு தகவல்களையும் வெளிப்படுத்தக்கூடியதாக தயாரிக்கப்படும் அறிக்கைகள் நிதிக்கூற்றுக்கள் ஆகும்.

24. நிறுவனமொன்றினால் பொதுவாக தயாரிக்கப்படும் நிதிக்கூற்றுக்கள் யாவை?
   * உற்பத்திக் கணக்கு
   * வியாபார இலாபநட்டக்கணக்கு
   * ஐந்தொகை
   * காசுபாதீடு
   * நிதி நிலை மாற்றங்களை காட்டும் கூற்று.

25. நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதன் நோக்கங்கள் யாவை?
   * வங்கிபோன்ற நிதி நிறுவனங்களுக்கு தகவல்களை வழங்கி மூலதனம் திரட்ட.
   * வருமான வரியைச் செலுத்த.
   * நிறுவனத் தகவல்களை ஒப்பிடுவதற்கு.
   * நிறுவனம்சார் தீர்மானங்களை மேற்கொள்ள.

26. ஐந்தொகையொன்று முதலீட்டாளருக்கு எவ்வாறான பயனுள்ள தகவல்களை வழங்குகின்றது?
   * மூலதனக்கட்டமைப்பு பற்றிய தகவல்கள்.
   * தொழிற்படு மூலதன விபரங்கள்.
   * நிதி உறுதிப்பாடு பற்றிய தகவல்கள்.
   * சொத்துக்கள் பற்றிய தகவல்கள்.

27. வியாபார ஆபத்து, நிதி ஆபத்து என்பவைகளை விளக்குக?
எந்தவோர் வியாபார நிறுவனமும் தனது நடவடிக்கைகளை நடாத்திச் செல்கையில் வியாபாரமொன்றில் ஏற்படக்கூடிய சாதாரண அபாயங்கள் - வியாபார ஆபத்து ஆகும். நிதி ஆபத்து எனும்போது நிறுவனமொன்றின் மூலதன இணைப்பின் காரணமாக ஏற்படுவது, அதாவது கடன் மூலதன அதிகரிப்பினால் வட்டி அதிகரிப்பதன் காரணமாக ஏற்படுவதாகும்.

### பயிற்சி

வினா

1. கீழே தரப்பட்டுள்ளது வரையறுத்த பொதுக்கம்பனி யொன்றின் ஐந்தொகையிலிருந்து பெயர்த்தெடுக்கப் பட்ட ஒரு பகுதியாகும்.

| | ரூபா |
|---|---|
| சாதாரண பங்குகள் | |
| அனுமதிக்கப்பட்ட @ ரூபா10/=வான 50,000 பங்குகள் | 500,000 |
| வழங்கப்பட்டு முழுமையாகப் பணம் | |
| செலுத்தப்பட்ட @ 10/=வான 35,000 பங்குகள் | 350,000 |
| பொது ஒதுக்கீடு | 25,000 |
| 10% தொகுதிக்கடன் | 125,000 |
| | 500,000 |

நிகழ்கால உழைப்புக்கள் வீதம் 20% ஆகும்.

கம்பனி புதிய செயற்திட்டமொன்றின் நிதியீட்டத்திற்கு மேலும் 100,000/= தொகையைத் திரட்டக் கருதுகிறது. மேலதிக நிதியைத் திரட்ட மிகப்பொருத்தமான நிதிமூலம் சாதாரண பங்குகளா? அன்றேல் தொகுதிக்கடன்களா? உமது விடைக்கான நியாயங்கள் தருக?

வினா

2. தொழிற்படு மூலதனப் பற்றாக்குறையின் விளைவுகள் யாவை?

விடைகள்

1. தொகுதிக்கடன்கள்
காரணம் - 100,000 ரூபாவை பங்குகள் மூலம் திரட்டு வதாயின், செலவு = 100,000 x 20% = 20,000 ரூபா மாறாகத் தொகுதிக்கடன் மூலம் திரட்டுவதாயின் செலவு = 100,000 x 10% = 10,000 ரூபா
எனவே - தொகுதிக்கடன் மூலம் திரட்டினால் (20000 - 10000) 10,000 ரூபாவைச் சேமிக்கலாம்.
   * தாழ் இணைப்புக் காணப்படுவதால் மேலும் கடன்பெற வாய்ப்பு இருப்பதனால்.
   * தேவையானபோது மீட்கக்கூடியதாகக் காணப்படுவதால்.
   * வருமான வரியில் விலக்குக் காணப்படுவதால்.

2.
   * உற்பத்தி விற்பனைகள் தடைப்படலாம்.
   * கடன்கொடுத்தோருக்குக் கொடுப்பனவை மேற்கொள்ள முடியாது. இதனால் சட்ட நடவடிக் கைகளை மேற்கொள்வர்.
   * புதிய வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது.
   * நிறுவன நன்மதிப்புக்கள் பாதிக்கப்படும்.
   * நிறுவனம் மிகை வியாபார நிலைக்குத் தள்ளப்படும்.

ஆசிரியர் :-
**N.உமாகாந்**
B.Com(Hons) (M.M.Spl)

# க.பொ.த. உயர்தரம்

## இரசாயனவியல்

இப்பகுதியில் க.பொ.த. உயர்தர பரீட்சை 2000, 2001, 2002 ஆகிய ஆண்டுகளில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட வினாக்களின் மாதிரிகள் ஆராயப்படுகிறது.

மாதிரி வினா 1
பின்வருவனவற்றில் எதற்கு நடுநிலையாக்கல் வெப்பம் உயர் புறவெப்பத்திற்குரியது.
(1) HF (2) HI (3) $HNO_3$
(4) $CH_3COOH$ (5) $CF_3COOH$

மாதிரி வினா 2
தாக்கமொன்றின் வெப்பக்கொள்ளவு மாற்றம் பின்வருவன வற்றில் எதில்/எவற்றில் தங்கியிருக்கும்.
(1) வெப்பநிலை (2) அமுக்கம்
(3) பௌதீகநிலை (4) தாக்கப்பாதை

மாதிரி வினா 3
பின்வரும் மூலக்கூறுகளில் எதற்கு பிணைப்புக் கூட்டற் பிரிவுச் சக்தி ($\Delta H_D^\ominus$) உயர்வானது.
(1) $F_2$ (2) $C_2$ (3) $Na_2$ (4) $O_2$ (5) $B_2$

மாதிரி வினா 4
பின்வரும் இலத்திரன் நிலையமைப்புக்களில் எதற்குரிய அணு, குறைந்த இலத்திரன் நாட்டமுடையது.
(1) $ns^1$ (2) $ns^2np^1$
(3) $ns^2np^3$ (4) $ns^2np^4$ (5) $ns^2np^5$

மாதிரி வினா 5
நிக்கல் (Z = 28) இன் அருட்டிய நிலையில் இலத்திரன் நிலையமைப்பு
(1) $3d^8 4s^1 4p^1$ (2) $3d^7 4s^1 4p^2$ (3) $3d^8 4s^2$
(4) $3d^{10} 4s^0$ (5)மேலுள்ள எதுவுமன்று

மாதிரி வினா 6
$N_2O_4$ மூலக்கூறு பற்றிப் பின்வரும் கூற்றுக்களில் எது/எவை உண்மையாகும்.
a) ஐந்து சிக்மா பிணைப்புக்களை உடையது.
b) மூன்று சிக்மா பிணைப்புக்களை உடையது.
c) நான்கு பை பிணைப்புக்களை உடையது.
d) இரண்டு பை பிணைப்புக்களை உடையது.

மாதிரி வினா 7
பின்வருவனவற்றிலிருந்து எது ஆகக்கூடிய சோடியற்ற இலத்திரன்களை உடையது.
(1) Cr (2) Mn (3) Fe (4) Zn (5) P

A.Shivakumar
(Final Year Student)
(Institute of Chemistry, Ceylon)





# நத்தார் சிறப்பு மலர்



# அனைத்து மக்களுக்கும் கிடைக்கவேண்டிய பாலன் இயேசுவின் அருளும் சமாதானமும்!

"சமாதானத்திற்காக போர்" இது கடந்த வருடங்கள் ஒலித்த சொற் தொடர்கள். இதில் ஒன்றுமட்டும் தெளிவாகிறது போரும் சமாதானத்தின் தேடலுக்காக என்று பார்க்கின்றவர்களும் உண்டு. "போர் இன்மையே சமாதானம்" என்று சிந்திப்பவர்கள் தான் இன்று எம்மிடையே அதிகம் காணப்படுகின்றார்கள். ஒருவிதத்தில் போரின் அழுத்தங்களில் இரண்டு தசாப்தங்களுக்கு வாழ்ந்தவர்கட்கு இது ஒருவிதத்தில் யதார்த்தம் தான். அது மட்டுமல்ல - தங்கள் சொந்தநலன்களுக்காக, சுயலாபங்களுக்காக, சமாதானத்தை விரும்புபவர்கள், பங்களிப்புச் செய்பவர்கள் எம் மத்தியில் இருக்கிறார்கள். உதாரணமாக, தெற்கில் வதியும் வர்த்தகர்கள் சமாதானத்தை விரும்புகிறார்கள். காரணம் வியாபாரத்திற்கு, அதனூடாக வரும் லாபத்திற்கு சமாதானச் சூழல் இன்றியமையாதது.

இப்படியான ஒரு சமாதானத் தேடலின் பின்னணியில்தான் இவ்வருடம் கிறிஸ்மஸ் நத்தார் விழா கொண்டாடப்படவுள்ளது. நத்தார் என்பது அடிப்படையில் சமாதானத்தின் அரசராம் இயேசுவின் மண்ணகப் பிறப்பின் விழாவாகும். அவர் பிறந்தவுடன் வானதூதர் எழுப்பிய கீதம் 'உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமை, பூவுலகில் அவர் தயவு பெற்றவர்கட்கு அமைதி உண்டாகுக' என்பதாகும். அவரின் பிறப்புடனே சமாதானச் செய்தி அறிவிக்கப்படுகிறது.

இயேசுவின் பிறப்பின் செய்தி சமாதானம் என்றால் - அந்த சமாதானத்தின் தனித்துவம்தான் என்ன? நாம் மேலே பார்த்த உலகம் தேடும் சமாதானம் கிறிஸ்துவின் சமாதான செய்திக்கும் அடிப்படையில் வித்தியாசம் உண்டா?

இக்கேள்விக்கான பதிலை இயேசுவே தந்துவிட்டார். "நான் தரும் சமாதானம் உலகம் தரும் சமாதானம் போலன்று" அப்படியென்றால், அடிப்படையில் இயேசு பிறப்பினூடாகக் கொண்டு வந்த சமாதானத்திற்கும் உலகம் தரும் அல்லது தேடும் சமாதானத்திற்கும் இடையில் இருக்கும் வேறுபாடுகள்தான் என்ன?

சமாதானம் என்பது முதலில் அகத்தில் ஆரம்பித்து பின்னர் புறத்தில் நிறைவு பெற உண்மையான நீடித்த சமாதானம் பிறக்கிறது. எனவே, எம்மில் எம் அகத்தினுள் இருக்கும் அடிமை விலங்குகளை நாம் உடைத்தெறியும்போதுதான் உண்மையான சமாதானம் பிறக்கிறது.

வேத நூலில் 'சமாதானம்' என்ற சொல்லின் உட்பொருள் **(Right Relativiship)** உண்மையான, சரியான உறவு என்பதேயாகும். ஆகவே அகத்தினுள் சரியான உறவு நிலை இல்லையெனில் சமாதானம் இல்லாததொரு நிலையேயாகும்.

இறுதியாக சமாதானம் என்பது பகைமையில், பழிவாங்கலில் இருகக முடியாது. மன்னிப்பிலும், ஒப்புரவிலும்தான் உண்மைச் சமாதானம் உருவாகும். பாலகன் இயேசு வளர்ந்து இறுதியாக சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் போது, அவரின் எதிரிகள் எள்ளி நகையாடினர். காறித்துப்பினர். ஆனால் இயேசு தம் இறுதி மூச்சை விடுவதற்கு முனபாக கூறிய வார்த்தைகள் "பிதாவே இவர்கள் அறியாமல் செய்கிறார்கள் இவர்களை மன்னியும்" பகைமை பழிவாங்கும் உணர்வுகளில் இருந்து விடுதலையடையாத மனம் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது. சரியான உறவிற்கு மன்னிப்பும், ஒப்புரவும் இன்றியமையாததொன்றாகும்.

இப்படியாக கிறிஸ்துவின் வாழ்வில் அவர் எப்போதும் அகத்தினுள் விடுதலையடைந்த மனிதனாகவே வாழ்ந்துள்ளார். தனக்குள் விடுதலையடைந்த மனிதன்தான் சமாதானத்தின் வித்தாகின்றான். சமாதானத்தின் வித்து விடுதலையடைந்த மனித உள்ளங்களிலேதான் முழுமையடைகின்றது.

எனவே, பிறந்த சமாதானத்தின் அரசராம் இயேசுவின் சுவடுகளை நாமும் பின்பற்றி, அகத்தினுள் விடுதலையாகி சமாதானத்தின் கருவிகளாகச் செயற்படுவோமாக!

பிறந்த பாலன் இயேசுவின் அருளும் சமாதானமும் அனைவருக்கும் நிறைவாகக் கிடைக்க எம் ஆசிகள்.

**அருட்பணி -**
**கி.ஜோ.ஜெயக்குமார்**


எல்லோருக்கும் எமது கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்

எங்கள் அன்பு வாடிக்கையாளர்களுக்கு!

கடந்த 44 வருடகாலமாக கல்விக்காகச் சேவையாற்றிவரும் நாங்கள், யாழ். நகரில் ஒரே கூரையின் கீழ் சகலவிதமான பாலர் பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழகங்கள் வரை உபயோகிக்கும் புத்தகங்கள், தமிழ், ஆங்கில நூல்கள் , வாழ்த்து மடல்கள், நாட்குறிப்பேடு, நாட்காட்டி, பாடசாலைக்கான கற்றல் - கற்பித்தல் உபகரணங்கள், பாடசாலை உபயோகப் பொருட்கள், புத்தக அலுமாரி (Cupboard), சங்கீத - வாத்திய இசைக் கருவிகள், மாணவர்களின் கல்வி சம்பந்தமான உபயோகப் பொருட்கள், அலுவலக உபகரணங்கள், அலுவலக உபயோகப்பொருட்கள், ஆரம்பப் பிரிவு மழலைகளுக்கான கல்வி உபயோகப் பொருட்கள் அனைத்தையும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலை ஆடர்கள் அனைத்தையும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலை ஆடர்கள் இலவசமாக பாடசாலைக்கே விநியோகிக்கப்படும்.

இன்றே விஜயம் செய்யுங்கள்

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டஸ்**

212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தலைமை அலுவலகம்:
A.C.D.I.L.,
371, Dam Street,
Colombo - 12.
T.P No. 434529, 336237,543547
Fax.No:- 541099

கிளை:
புக் சென்ரர்,
இல.05, சென் லூசியஸ் வீதி,
கொட்டாஞ்சேனை,
கொழும்பு - 13.

NO.81,
Arrmour Street,
Colombo - 13.

கல்லூரி மாணவர்களின் நன்மை கருதி சனி, ஞாயிறு நாட்களிலும் விற்பனை நடைபெறும்.

சி/333



கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்

**யாழ். வாச் வேக்ஸ்**

55, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சிறந்த முறையில் கடிகாரம் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும்.



வாடிக்கையாளர்களுக்கு பெரதேனியாவின் நத்தார் வாழ்த்துக்கள்

பல் சிகிச்சை , மூக்குக் கண்ணாடி அகம்

பல்கட்டுதல், மிதப்புப் பற்களுக்கு கிளிப்போடுதல், வாயால் சுவாசிப்பதனால் ஏற்படும் பல்மிதப்பைத் தடை செய்வதற்கான "ORAL SCREEN" தயாரித்தல், வாய்ப் புற்றுநோய் உள்ளவர்களுக்கான அணிகலன்கள் அமைத்தல் போன்றவற்றில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அதிசிறப்புத்தேர்ச்சி பெற்று வட, கிழக்கு மாகாணத்தில் இயங்கும் ஒரே ஸ்தாபனம்.
கண் பரிசோதனை இலவசமாக நடாத்தப்பட்டு, உடனுக்குடன் வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட பிறேம்களில் கண்ணாடிகளைப் பெற்றிட நாடவேண்டிய ஒரே இடம்.

**பெரதேனியா**

பல் சிகிச்சை, மூக்குக் கண்ணாடி அகம்
494, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.NO -077-174119

ஏனைய கிளைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். | மோகன்ஸ் கட்டடம் நெல்லியடி | ரஞ்சிதா சதுமலை | துரைஐயா அவனியு அச்சுவேலி | Residence மூளாய் றோட், மூளாய். TEL:070-213008 |

சி/358



வாடிக்கையாளர்களுக்கு எம் இனிய நத்தார் வாழ்த்துக்கள்
உங்களின் புதிய தொழில் முயற்சிகளுக்கும்,
தற்போதைய தொழில் திறனை மேம்படுத்தவும்,
**சாமுவேல் சன்ஸ் அன்ட் கம்பனி** வழங்கும்....
(வடபகுதியின் தொழில்நுட்பத்துறை முன்னோடிகள்)





- கட்டட நிர்மாண சேவைகளும் ஆலோசனைகளும்
- கட்டட நிர்மாண உபகரணங்கள்
("FCM" Concrete mixer, "Exen" Poker vibrators)
- சேர்விஸ் ஸ்ரேஸன் மற்றும் கராஜ் உபகரணங்கள்
("ELGI" Air compressor, Single or Double post 2 plst screw auto lifts, Tire changers etc.)
- பயணிகள் மற்றும் பொருட்கள் மின் உயர்த்திகள்
("Johnson" lifts, "Elephant" Manuel/ electric chain blocks, "Beta" cable hoist etc.)
- ஜெனரேட்டர்கள் மின் வலு உபகரணங்கள்
(Generators, Power Tools-Drill, Angle Grinder, Jig saw, Sander, Router, Planner, etc.)
- நீர் இறைக்கும் இயந்திரங்கள்
(Agro-water pumps, waste water pumps, Submersible pumb etc.)

- 80வருடத்திற்கு மேற்பட்ட பொறியியல் அனுபவம்
- இலகுவில் கிடைக்கும் உதிரிப்பாகங்களும் விற்பனைக்குப் பிந்திய சேவையும்.
- இலங்கையில் அதிகளவில் பாவனையில் உள்ள உலகப் பிரசித்தி பெற்ற இயந்திர சாதனங்கள்
- நம்பிக்கை அக்கறையுடன் கூடிய தொழில்நுட்ப ஆலோசனை



மேலதிக விபரங்களுக்கு ... சாமுவேல் சன்ஸ் அன்ட் கம்பனி லிமிட்டெட்

யாழ்ப்பாணத்தில்
412, 414, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி 021-2222665.

கொழும்பில்....
சந்தைப்படுத்தல் பிரிவு, 268 நாவல வீதி - நாவல
தொலைபேசி-074-409960-4
FAX-074-409965
E-Mail-sales @samuel-sons.com



சி/356

# நத்தார் சிறப்பு மலர்

# யேசுகிறிஸ்து பிறப்புவிழாவின் நிறைவில் கடந்தகால அனுபவங்களை தூக்கிஎறிந்து விடுவதா?

இன்று 2002ஆம் ஆண்டுக்குரிய கிறிஸ்து பிறப்பு பெருவிழாவை கொண்டாடும் போது நமது ஈழநாடு பத்திரிகையை படிக்கின்ற வாசக அன்பர்கள் அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பின் மகிழ்வின் வாழ்த்துக்களை முதலில் தெரிவித்துக் கொள்கிறோம்.



'உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக. உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக' என்ற வார்த்தைகளின் ஆழ்ந்த அர்த்தங்கள் உங்கள் மனதுகளில் நின்று நிலைத்து இறை அருளையும் ஆசியையும் நிறைவாய்ப் பொழியட்டும்.

நீண்டகாலமாக போரினாலும் அதன் அழிவுகள் அனர்த்தங்களாலும் துன்பங்களையும் வேதனைகளையும் அனுபவித்த இலங்கை மண்ணிலும் மக்கள் மனதுகளிலும் அமைதியும் சமாதானமும் தோன்றிய பின்னர் கொண்டாடப்படுகின்ற இக் கிறிஸ்மஸ் விழா எல்லோர் மனதுகளிலும் மகிழ்வையும் மன நிறைவையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த மனமகிழ்வினதும் நிறைவினதும் வெளிப்பாடுகளை இவ் விழாக் காலத்தில் வெளிப்படையாகவே காணக்கூடியதாக இருக்கிறது.

இலங்கை அரசு டிசம்பர் - ஜனவரி காலப் பகுதியை சமாதான கொண்டாட்ட காலமாக பிரகடனப்படுத்தியிருப்பதை நாம் இங்கு கவனத்தோடு நோக்க வேண்டும். நீண்டகாலப் போரும் அதன் கொடூர நிகழ்வுகளும் இனியும் வேண்டாம். அமைதியையும் சமாதானத்தையும் நாம் பகிர்ந்து கொள்ளுவோம் என்ற மகிழ்வின் செய்தியையே இவ்வறிவிப்பு வெளிப்படுத்தியிருக்கிறது.

இலங்கையின் தலைநகரான கொழும்பு மாநகர் முழுவதும் நிற மின்குமிழ்களாலும் சோடினை தோரணங்களாலும் அலங்கரிக் கப்பட்டு பெருவிழாக்கோலம் பூண்டிருக்கிறது. மக்கள் அனைவரும் மத பேதமின்றி இவ்விழாவினை கொண்டாட ஆயத்தமாக இருக்கிறார் கள் என்பதையே இது காட்டுகிறது. இதனைவிட இக்கிறிஸ்மஸ் விழாவினை கொண்டாட இசை நிகழ்ச்சிகளும் விளையாட்டு போட்டிகளும் மற்றும் சிறப்பு நிகழ்வுகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

நத்தார் பண்டிகையை முன்னிட்டு இலங்கை தபால் திணைக்களம் நாலு ரூபா ஐம்பது சதம் பெறுமதியான புதிய முத்திரை ஒன்றை கடந்த 15ஆம் திகதி நீர்கொழும்பு தேவாலயத்தில் சபாநாயகர் யோசவ் மைக்கல் பெரேரா தலைமையில் நடந்த விழாவில் வெளியிட்டிருக்கின்றது. நத்தார் கிறிஸ்து பிறப்பு விழாவின் நினைவாக முத்திரை ஒன்று வெளியிடப்படுவது இலங்கையில் இதுவே முதல் தடவை என்பதை நாம் இங்கு குறித்துக் கொள்ள வேண்டும். மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மார்க்கார், உள்துறை கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க, தபால்மா அதிபர் எம். பியசேன ஆகியோர் கலந்துகொண்ட இவ் விழாவில் ஏராளமான குருக்கள், கன்னியர், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு இவ்விழாவினை சிறப்பித்திருக்கிறார்கள். இலங்கை முழுவதிலும் கிறிஸ்துவின் பிறப்பு விழா கோலாகலமாக கொண்டாடப் படவேண்டும் என்று அறிவிக்கப்படுகின்ற ஒரு நிகழ்வாகவே இது அமைந்திருக்கிறது.

யாழ் நகரிலும் இவ்வாண்டுக் குரிய கிறிஸ்மஸ் விழா களைகட்டியிருக்கிறது. மிக நீண்டகாலமாக நம்பி நம்பி ஏமாந்து போன சமாதானம் இம்முறை தோன்றியுள்ளது. இது நின்று நிலைக்கும் என்ற அசையாத நம்பிக்கையோடே இவ் விழாவினை மக்கள் எல்லோரும் கொண்டாடுகிறார்கள்.

கிறிஸ்மஸ் விழாவின் மகிழ்வினை வெளிப்படுத்தும் பல நிகழ்வுகளை இம்முறை யாழ் மக்கள் நிகழ்த்தப்போகிறார்கள். மிக நீண்ட காலமாக நிகழ்த்த முடியாமலும் நிகழ்த்த விரும்பாமலும் இருந்த பல நிகழ்வுகளுக்கு அனுமதியும் மனநிலையும் இன்று இடம் கொடுத்திருக்கிறது. அவற்றில் ஒன்று பட்டாசுகளை வெடிக்க வைத்து மகிழ்கின்ற ஒரு அனுபவமாகும்.

பட்டாசு கொழுத்துகின்ற அனுபவம் இளையவர்களுக்கு ஓர் இனிமையான புதுமையான அனுபவம். அவ் அனுபவம் மிக நீண்ட காலத்தின் பின்னர் இவ்வாண்டு யாழ் நகரில் பலருக்கு கைகூடியிருக்கிறது. பட்டாசு கொழுத்த அனுமதி கிடைத்த காலத்தில் அவ்அனுபவத்தை பெற்றுக்கொள்ளும் இளமைத் துடிப்பில் எம் இளையவர்கள் பலர் தம்மையே மறந்து மற்றவர்களை துன்புறுத்துகின்ற நிலைக்கு சென்றார்கள் என்பது வேதனைக் குரிய விடயமாகும்.

பட்டாசு சத்தத்தை கேட்டவுடன் புலர் மனதுகளிலும் நினைவுகளிலும் துப்பாக்கி வேட்டு சத்தங்களும் அதன் துயர அனுபவங்களுமே முதலில் வரும் என்பதை இவர்கள் ஏனோ உணரத் தவறி விட்டார்கள். எவ்வளவுதான் பட்டாசு பற்றிய நினைவோடு இருந்தாலும் இச்சத்தம் கேட்டவுடன் திடீரென மனது பதைபதைக்கச் செய்யவே போகிறது. சில காலம் சென்ற பின்னரே இந்த உளவியல் தாக்கம் மனதைவிட்டு நீங்கும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண் டும். கிறிஸ்மஸ் விழாக் காலத்தில் பட்டாசுகளைக் கொழுத்தி தம் மகிழ்வினை கொண்டாட வேண்டியவர்கள் மிகுந்த கவனத்தோடு தம்மையும் காயப்படுத்தாமல் மற்றவர் உணர்வுகளையும் புண்படுத்தாமல் நடந்து கொள்வது வரவேற்கத் தக்கதாகும்.

யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தம் கிறிஸ்மஸ் தினச் செய்தியில் இதுபற்றி விசேட கவனம் கொண்டு குறிப்பிட்டிருப்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. அவர் தம் செய்தியில், 'மிக நீண்ட கால இடைவெளியின் பின்னர் சுதந்திரமாக இவ்விழாவினைக் கொண்டாடவும் பட்டாசினை வெடிக்க வைக்கவும் கூடிய ஒரு நிலை தோன்றியுள்ளது. பட்டாஸ் கொழுத்துகின்ற அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளாத எம் இளையவர்கள் பட்டாசினைக் கொழுத்தும்போது நடந்து கொள்ளுகின்ற விதம் பற்றி கவனத்தில் எடுத்துக்கொள்வது நல்லது. பட்டாஸ் கொழுத்தும் மகிழ்வில் மற்றவர்களைப் பயமுறுத்துவதும், துன்புறுத்துவதும், குழப்பித் தொந்தரவு செய்வதும் தவிர்க்கப்பட வேண்டும்' - என்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

~அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை~

யாழ்ப்பாண மண் கடந்த பல வருடங்களாக இழப்புக்களையும் இறப்புக்களையுமே சந்தித்த மண். மக்கள் அனைவரும் இன்னல்களையும் இடம்பெயர்வுகளையுமே அனுபவித்தவர்கள். போரின் சோகவடுக்களை கடந்தகால கசப்பான அனுபவங்களாக தம் மனதுகளின் பின்னணிகளில் பொதிந்து வைத்துக்கொண்டு வாழ்நாள் முழுவதும் வாழ வேண்டியவர்களாக ஏராளமானவர்கள் எம் மண்ணில் இனி வாழப் போகிறார்கள் என்பது வேதனையோடு ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒரு உண்மையாகும்.

இனி எமது மண்ணில் என்ன நிகழ்வு நடந்தாலும் இக்கடந்தகால சரித்திர நிகழ்வுகள் அழிக்கப்பட முடியாமல் என்றுமே நிலையாக இருக்கப் போகின்றன. நாம் இனி என்ன செய்தாலும் எப்போதும் இதனை மனதில் கொண்டவர்களாகவே வாழவும், மற்றவர்களை வாழ வைக்கவும் வேண்டும்.

மகிழ்வின் நிறைவில் மனிதத்தை மறந்து போவதும் கடந்த கால அனுபவங்களை தூக்கி எறிநது விடுவதும் சரியானது அல்ல. எமது மகிழ்வின் நிகழ்வுகள் ஒவ்வொன்றிலும் இந்த அனுபவங்களை பெற்ற மக்களை மனதுகளில் கொண்டிருப்பது சிறப்பானது. எமது மகிழ்வின்போது அந்த மகிழ்வின் நிலைகளை இவர்களோடும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற ஒரு சிறிய எண்ணத்தை எமது மன்துகளில் நாம் வைத்துக் கொள்வோமேயானால் ஆண்டவர் இயேசுவின் மாபெரும் பிறப்பின் மகிழ்வை நாமும் பெற்று மற்றவர்களோடும் அதனைப் பகிர்ந்தவர்களாவோம். ஓர் ஆண்மகவு நமக்குத் தரப்பட்டுள்ளார். ஆட்சிப் பொறுப்பு அவர் தோள் மேல் இருக்கும். அவர் திருப்பெயரோ வியத்தகு ஆலோசகர், வலிமைமிகு இறைவன், என்றுமுள்ள தந்தை, அமைதியின் அரசர் என அழைக்கப்படும்' (எசாயா 9:6) என்ற இறைவாக்கின் எசாயாவின் வார்த்தைகளின் மகிழ்வை இக்கிறிஸ்மஸ் காலத்தில் நாம் சந்திக்கும் அனைவரோடும் பகிர்ந்து கொள்ளுவோம்.

පාලන්ස් මල්ටි සෙන්ටර් සහ ලොජ්
71(39), චුන්ඩිකුලි, කැන්ඩි පාර, යාපනය.
T.P 021-2223248
வாடிக்கையாளர்கள், அன்பர்களுக்கு எமது நத்தார் வாழ்த்துக்கள்
பாலன்ஸ் மவ்ரி சென்ரர் & லொஜ்
தொ. பே. இல. 021-2223248
தொ. நகல். இல. 021-2223248
இல. 71(39), கண்டி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
உரிமையாளர் பொ.ஜெயபாலன்
PALAN'S MULTI CENTRE & LODGE
*Recording Spot
*Computer Services
*Communication
*Building Matereals Sup.
We have Rooms with attached Bathrooms
T.P.No:021-2223248
Fax:021-2223249
No:71,(39) Kandy Road, Chundikuli-Jaffna.

கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்
IEE Computer Division
121/1, அரசடிவீதி, கந்தர்மடம்
(கணினி மூலம் ஆங்கில மொழி)
(personal & Group Classes)
ஆங்கில மொழி கல்வியாண்டு - 2003
தரம் 6 - O/L வரை, பொது ஆங்கிலம் A/L (2004 - 2005)
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
ஒவ்வொரு வகுப்பிலும் பத்து மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்.
ஆசிரியர்: திரு.க.ரமணதாசன்.
(சி-298)

எல்லோருக்கும் எமது நத்தார் வாழ்த்துகள்
சிற்றி மெடிக்கல்ஸ்
CITY MEDICALS
487, HOSPITAL ROAD,
JAFFNA.

நத்தார் வாழ்த்துகள்
றெனி பல், மூக்குக் கண்ணாடி அகம்
RENNY
* உங்கள் கண்களை பரிசோதித்து, கண்ணாடிகளை பெற்றுக் கொள்ள
* விழுந்த பற்களுக்கு நிகரான பற்களை கட்டிக் கொள்ள
* மிதப்பு பற்களுக்கு "கிளிப்" செய்து கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
றெனி பல், மூக்குக்கண்ணாடி அகம்
ஆஸ்பத்திரி வீதி, ஆனைப்பந்தி, சாவகச்சேரி, பருத்தித்துறை. T.P No :- 2223703
(சி/357)

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும். - திருக்குறள்

# நமது நோக்கு

## தம் தலைக்குத் தாமே மண்வாரிப் போடும்...

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக உள்ளக சுயநிர்ணயத்துடன் கூடிய சமஷ்டி அமைப்பொன்றை ஆராய்வதற்கு அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் இணக்கம் கண்ட மாத்திரத்திலேயே - அது பற்றிய ஆழமான ஆய்வுகளோ, விரிவான பேச்சுக்களோ ஆரம்புக்கப்படாத நிலையில் 'சமஷ்டி' பற்றிய பல்வேறு விமர்சனங்களும், எச்சரிக்கைகளும், கருத்துக்களும் பல கோணங்களிலிருந்தும் எழ ஆரம்பித்துள்ளன.

'சும்மா இருந்தவன் வாய்க்கு மெல்வதற்கு அவல் கிடைத்தது போல' தமிழர்களுக்கான உரிமைகள் என்ற செய்தி காற்றுவாக்கில் பரவ ஆரம்பித்த உடனேயே,இன்னமும் பிறக்காத குழந்தைக்குப் பெயர் வைப்பதான அவசர கோலத்தில் - தெற்கிலிருந்து அபிப்பிராயங்கள் வெளிக்கிளம்பி வருகின்றன.

ஒஸ்லோவில் நடைபெற்ற பேச்சுக்களின் விபரங்கள் எதுவும் தனக்குத் தெரிவிக்கப்படவில்லை என ஒரு புறம் அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க-

மறுபுறம், ஒஸ்லோவில் இணக்கம் காணப்பட்டதான கவலை மட்டும் வைத்துக்கொண்டு - சமஷ்டித் தீர்வு பயங்கரமானது, ஆபத்தானது என அறிக்கைகள் விட்டு வருகின்றார்.

இனிவரப்போகும் பேச்சுக்களிலேயே, கட்டங் கட்டமாக மாத்திரமே ஆராயப்படவிருக்கும் சமஷ்டி பற்றிய உள்ளடக்கங்கள் எதுவும் வெளிவராத நிலையில் - ஜனாதிபதி சந்திரிகா, முந்திக்கொண்டு விடுக்கும் இந்த எச்சரிக்கைகள் போதாதென்று,

அவரது பிரசாரப் பீரங்கிகளான பொதுஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் சரத் அமுனுகமவும், தனக்கடுத்த வாரிசு என ஜனாதிபதி சந்திரிகாவினால் சூசகமாக சுட்டிக் காட்டப்படும் அவரது சகோதரன் அனுரா பண்டாரநாயக்காவும் சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் - சமஷ்டியை ஒரு பிடி பிடித்தே வருகின்றனர்.

எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ மாத்திரம்- ஆராயப்படவிருக்கும் சமஷ்டித் தீர்வின் உள்ளடக்கங்கள் தெரியும் வரை, தான் கருத்துக் கூறவிரும்பவில்லை என சற்றே ஒதுங்கிக்கொண்டுள்ளார்.

இன்னொரு புறம் தெற்கின் மிகப்பிரபல்யமான 'குழப்பவாதிகளான' ஜே.வி.பியினரோ- தமிழ், தமிழன், விடுதலைப் புலிகள், உரிமை, சமத்துவம், அதிகாரப்பரவலாக்கம், மத்தியஸ்தம், நோர்வே, சமாதானம், அமைதி என எங்கு பெயர்வந்தாலும் அவற்றைக் கடுமையாகவும் கண்டூடித்தனமாகவும் எதிர்த்து வரும் நிலையில்- புதிதாக 'சமஷ்டி'யையும் தமது பட்டியலுக்குள் வெகு ஆர்வமாகச் சேர்த்து விட்டனர்.

தமது அரசியல் செயற்பாடுகளுக்கு கொள்கை ரீதியாகவோ, நியாயத்தின் பேரிலோ வரைவிலக்கணம் கூறத் தெரியாத அல்லது கூறமுடியாத பாதையில் செல்லும் ஜே.வி.பி.- தமது அரசியல் செயற்பாடுகள் அனைத்தையும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு எதிராகத் திருப்பிவிட முயன்று வருகின்றது.

இதற்கு- இன்னமும் மங்கிவிடாதிருக்கும் - பௌத்த சிங்களப் பேரினவாதமும் தமிழர் விரோத போக்குகளும் கொண்ட சக்திகள துணைவர, பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து- பிரதமர் ரணில் , தமிழர்களுக்கு நாட்டையே கொடுத்து விட்டதாக, ஜே.வி.பி யினர் கூச்சல் எழுப்புகின்றனர்.

தமிழர்களோடு எந்த வகையில் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளலாம் என்ற பேச்சுக்களின் ஆரம்பத்துக்கு நாள்குறிக்க, அரசாங்கம் தற்போதுதான் முயற்சிகளை ஆரம்பித்திருக்கும்போது, தனிநாட்டையே விடுதலைப்புலிகளிடம் அரசாங்கம் தாரைவார்த்து விட்டதாக ஜே.வி.பி. குரலெழுப்புவது- இனவாதத்தின் உச்சக் குரலாகவே வெளிப்படுத்தப்படுகின்றது.

பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பியும் விரைவில் ஆரம்பிக்கவிருக்கும் 'சமஷ்டி பற்றிய விழிப்புணர்வை சிங்கள மக்களிடம் எடுத்துக்கூறும் பிரசார இயக்கம்' தான் இதைவிட முக்கியமான விடயமாகும் . தெற்கில் ஒவ்வொரு வீடுவீடாக, கிராமம் கிராமமாக இந்தப்பிரசார இயக்கத்தை முன்னெடுக்கப் போவதாக அறிவித்திருக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணி- ஜே.வி.பி கூட்டணி, சிங்கள மக்களிடம் எதனை எடுத்துச்சொல்லப் போகின்றது என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும்.

இது வரையில் இணக்கப்பாட்டு அளவிலேயே நிற்கும் சமஷ்டிக்கான தீர்வைப் பற்றிய - பூதாகாரமான, உண்மைகளுக்குப்புறம்பான கருத்துக்களையும், முன்னெச்சரிக்கை என்ற பெயரில்- இனவாத வித்துக்களையுமே பரப்புவதற்கு இப்பிரசார இயக்கம் முயலப்போகிறது.

இலங்கைத்தீவில் நிரந்தர அமைதிக்கான, சகல இனங்களும் சமாதானத்துடன், நட்புறவுடன் வாழக்கூடிய அரசியல் தீர்வுக்கான- முயற்சிகளை வெறும் அரசியல் இலாபத்துக்காக சிதைத்து விடுவோம் எனத் தீவிரமாகக் கங்கணம் கட்டிநிற்கும் இவர்களை எவ்வகையில் சேர்ப்பது?

தாமும் குட்டிச்சுவராகி நாட்டையும் குட்டிச்சுவராக்குவோம் என உறுதியாகவிருக்கும் இவர்களுக்கு, அமைதியை நாடும் சிங்கள மக்களே தகுந்த பாடம் புகட்ட வேண்டும்.

# முகமாலை முன்னணிக் காவல்நிலையில் கனிஷ்ட படையினர் மீது ராகிங் ஒருவர் மரணம்; 6 பேர் மயக்கம்

(நமது நிருபர்)

முகமாலை முன்னரங்க காவல் நிலைகளில் பணியாற்றும் படையினர், சிரேஷ்ட படை அதிகாரிகளால் ராகிங் செய்யப்பட்டத்தில் ஒரு லான்ஸ் கோப்ரல் உயிரிழந்தார். ஆறு பேர் மயக்கமுற்ற நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இச்சம்பவம் கடந்த சில நாட்களுக்கு முன்னர் இடம் பெற்றுள்ளது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

முகமாலை முன்னரங்க நிலைகளில் பணியாற்றுவதற்காக அனுப்பிவைக்கப்பட்டிருந்த புதிய படையினருக்கு இங்குள்ள சிரேஷ்ட படையதிகாரிகள் தொடர்ச்சியான கடும் பயிற்சிகளைச் செய்யுமாறு நிர்ப்பந்தித்துள்ளனர்.

தொடர்ச்சியாக புதிய படையினர் மீது ராகிங் செய்து வந்த சிரேஷ்ட படையதிகாரிகள் சம்பவ தினத்தன்று, புதிய படையினரைத் தாக்கியதுடன் குளத்தில் தள்ளி வீழ்த்தியுள்ளனர்.

இதனால் இரத்தினபுரி ககவத்தையைச் சேர்ந்த லான்ஸ் கோப்ரல் சுகத் ரத்னாயக்க என்ற இராணுவ வீரர் குளத்தில் மூழ்கி உயிரிழந்தார்.

மேலும் ஆறு லான்ஸ் கோப்ரல்கள் மயக்கமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் இராணுவப் பொலிஸார் 13 சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளான லான்ஸ் கோப்ரல்களைக் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

# 60 பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம் பொலிஸ் ஆணைக்குழுவினால் ரத்து!

(கொழும்பு)

உள்துறை அமைச்சின் உத்தரவுக்கு அமைவாக பொலிஸ் திணைக்களத்தினால் 60 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு வழங்கப்பட்ட இடமாற்ற உத்தரவை சுயாதீன பொலிஸ் சேவை ஆணைக்குழு இடைநிறுத்துமாறு உத்தரவிட்டிருக்கின்றது.

அரசியல் வாதிகள், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிபார்சுக்கு அமைவாக இந்த இடமாற்றங்கள் செய்யப்பட்டன. முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தமிழர் கூட்டமைப்பு ஆகியன இந்த இடமாற்றங்களின் பின்னணியில் இருந்ததாகவும் சுயாதீனப் பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உள்துறை அமைச்சினால் வழங்கப்பட்ட இந்த இடமாற்ற உத்தரவு உடனடியாக ரத்துச் செய்யப்படுவதாகவும், தமக்குத் தெரியாமல் எந்த இடமாற்ற உத்தரவுகளையும் வழங்க வேண்டாம் எனவும் பொலிஸ் திணைக்களத்தை, சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு கேட்டுக் கொண்டுள்ளது.

சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு அமைக்கப்பட்ட பின்னர் மேற்கொண்டுள்ள முதல் நடவடிக்கை இது என்பது குறிப்பிடத்தக்கது.

# கடற்படைத் தளபதி சந்தகிரி இந்தியாவுக்கு நேற்றுப் பயணம்

(கொழும்பு)

சிறிலங்கா கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி இந்தியாவுக்கு நேற்று புறப்பட்டுச் சென்றார். இரகசிய விஜயம் ஒன்றை மேற்கொண்டு, இவர் இந்தியா சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவில் தங்கியிருக்கும் போது, இந்திய கடற்படை அதிகாரிகளிடம், புலிகளின் கப்பல்கள் தொடர்பான நடமாட்டத்தை அறிந்து கொள்வதற்கு அவர் உதவிகோருவார் எனவும் கூறப்படுகின்றது.

இதேவேளை, இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணான்டஸுடனும் இவர் பேச்சுக்களை நடத்தலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# 44 இந்திய மீனவர்களும் கச்சதீ வருகே விடுவிப்பு

(சென்னை)

சிறிலங்காக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 44 இந்திய மீனவர்கள் நேற்று முன்தினம் கச்சதீவுக் கடலில் விடுவிக்கப்பட்டனர்.

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, கடந்த ஒக்ரோபர் 26 ஆம் திகதி, 44 தமிழக மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

பொலிஸாரால் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட இம்மீனவர்களை விடுவிப்பதற்கான உத்தரவு கடந்தவாரம் யாழ்.நீதிமன்ற நீதிவானால் விடுக்கப்பட்டிருந்தது. இதையடுத்தே நேற்று முன்தினம் கடற்படையினர் கச்சதீவுக்கு அருகில் - இந்தியக் கடற்பகுதியில் வைத்து 44 தமிழக மீனவர்களையும் விடுவித்தனர்.

விடுவிக்கப்பட்ட மீனவர்களில் காரைக்காலைச் சேர்ந்தவர்களை இராமேஸ்வரத்திலிருந்து அழைத்து வருவதற்காக பாண்டிச்சேரி மீன்பிடித்துறை அதிகாரிகள் அங்கு சென்றுள்ளதாக பாண்டிச்சேரி முதலமைச்சர் ரங்கசாமி தெரிவித்தார்.

# எதிர்க்கட்சிகள் விமர்சித்தாலும் நோர்வேயின் பங்களிப்பு முக்கியம்

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சிகள் நோர்வேயின் சமாதானத்தீர்வுக்கான பங்களிப்புக் குறித்து பல்வேறு விமர்சங்களையும், குறைகளையும் கூறினாலும் சமாதான முயற்சிகளில் நோர்வேயின் பங்களிப்பு மிகமுக்கியமானது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிக்கும்போது, இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக நோர்வே அரசாங்கம் மேற்கொண்டு வரும் முயற்சிகள் பாராட்டத்தக்க வகையிலேயே அமைந்துள்ளன.

இதுவரையில் இந்த பங்களிப்புக்களின் மூலம் இலங்கை பல இலக்குகளை எட்டமுடிந்துள்ளது. இப்படியான நிலையில் எதிர்கட்சிகள் முரண்பாடான கருத்துக்களையும், விமர்சனங்களையும் தெரிவிப்பது வேதனைக்குரியது எனவும் பீரிஸ் மேலும் குறிப்பிட்டார்.

# திருமலைத்துறைமுகக் கடலில் மீன்பிடிக்கப் படையினர் அனுமதி

(திருமலை)

திருகோணமலை துறைமுகத்தில் மீன்பிடிப்பதற்குப் படையினர் அனுமதி வழங்கியுள்ளனர். நீண்ட காலமாக மீன்பிடிக்கத் தடை விதிக்கப்பட்டிருந்த துறைமுகக்கடற் பகுதியில் வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது.

மீனவர் சங்கப்பிரதிநிதிகளுக்கும் கடற்படை அதிகாரிகளுக்குமிடையில் இடம்பெற்ற பேச்சுக்களையடுத்தே துறைமுகப்பகுதியில் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டது.

துறைமுகப் பகுதிக்குள் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் குறிப்பிட்ட ஒரு பகுதிக்கூடாகவே கடலில் இறங்க வேண்டும் என்றும், கடற்படைத்தளத்திற்கு அருகில் மீனவர்கள் வரக் கூடாது எனவும், கடற்படையினரால் நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# சுதந்திரக்கட்சி – ஜே.வி.பி. கூட்டு; கொழும்பில் தொடரும் பேச்சுக்கள்!

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஜே.வி.பியும் இணைந்து அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுப்பது குறித்து விரிவான தொடர் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வரு கின்றன.

சுதந்திரக் கட்சிப் பிரமுகர்களான மங்கள சமரவீர, நிமால் சிறிபால டீ சில்வா, மைத்திரிபால சிறிசேன, சரத் அமுனுகம ஆகியோரும், ஜே.வி.பியின் முக்கியஸ்தர்களான விமல் வீரவன்ஸ, நந்தன குணதிலக, ரில்வின் சில்வா ஆகியோருடன் பேச்சுக்களை நடத்தி வருகின்றனர்.

அரசாங்கத்திற்கு எதிரான அரசியல் நகர்வுகளை மேற்கொள்வது, மாற்று அரசு ஒன்றை ஸ்தாபிப்பது, சமாதான முயற்சிகளிலிருந்து நோர்வேயைப் புறந்தள்ளுவது போன்ற விடயங்கள் குறித்து இந்தப் பேச்சுக்களில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுவருகின்றது.

சுதந்திரக்கட்சியும் ஜே.வி.பியும் அரசியல் ரீதியாக இணைந்து கொள்வது தொடர்பான பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அதேவேளை, பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கத்துவம் வகிக்கும் கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சம சமாசக்கட்சி என்பன இக்கூட்டில் இணைந்து கொள்வது தொடர்பாக எந்த முடிவும் எடுக்கவில்லை.

தற்போது, அரசாங்கம் முன்னெடுக்கும் சமாதான முயற்சிகள் தொடர்பாக ஜே.வி.பி. கொண்டிருக்கும் தீவிரமான நிலைப்பாடு காரணமாக ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்வதற்கு இவ்விரு கட்சிகளும் தயக்கம் காட்டிவருகின்றன.

(க)

# உள ரீதியாகப் பாதிப்புற்றோரை ஆற்றுகைப்படுத்தி உளவளத்துணையளிப்பதே சாந்திகத்தின் நோக்கம்

**சாந்திகம் - யாழ்.குடாநாட்டில் உளவளத்துணை வழங்குவதற்கென ஆரம்பிக்கப்பட்டு இன்றும் தனது சேவையை சிறப்புறத் தொடர்ந்து வருகிறது. நிலையத் தலைவரும், யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதம தாதியப் பரிசாரகருமான என். கனகரத்தினத்துடனான நேர்காணல் இது.**

***கேள்வி:-*** யாழ்ப்பாணத்தில் ''சாந்திகம்'' உளவளத்துணை நிலையம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது? அதன் சேவைகள் எவ்வாறுள்ளன?

***பதில்:-*** 1983 ஜுலையில் ஏற்பட்ட இனக்கலவரத்தைத் தொடர்ந்து, ஆரம்பித்த உள்நாட்டு யுத்தம், யாழ்.குடாநாட்டில் இருந்த மக்களுக்கு உடல், உளரீதியான பாதிப்புக்களை ஏற்படுத்தியது. உயிரிழப்பு, சொத்து இழப்புக்கள், பாதுகாப்பின்மை, தொழில் இழப்பு மற்றும் சுதந்திரமின்மை போன்ற இன்னோரன்ன பாதிப்புக்களினால் எம்மக்கள் உளப்பாதிப்புக்குள்ளானார்கள்.

இந்நிலையில் மக்களின் உள ஆரோக்கியத்தில் அக்கறை கொண்ட சில வைத்தியர்கள், துறவியர்கள் மற்றும் மருத்துவ மாணவர்கள் ஆகியோரால் "குவேக்கர்" சமாதான சேவையின் ஆதரவில்- 1988ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி நற்சமூக நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்ட "சாந்திகம்", பின்னர் அதே ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதல், முதலாம் குறுக்குத் தெருவில் இயங்க ஆரம்பித்தது.

ஆரம்பத்தில் போரினாலும், பிற காரணங்களாலும் உளரீதியாகப் பாதிப்புற்றோரை ஆற்றுப்படுத்தி உளவளத்துணை அளிப்பதை பிரதான நோக்காகக் கொண்டிருந்தது. இந்த மனிதாபிமானச் செயற்பாட்டில் அருட்தந்தை டேமியன், வைத்தியக் கலாநிதிகள் ஆர்.கணேசமூர்த்தி, ஆர். தெய்வேந்திரன், சுகுமார், என்சிவராசா ஆகியோரும் பெரும பங்காற்றினர். துணைநாடிவந்தோர்க்கு வைத்தியக் கலாநிதிகள் சிவசங்கர், லக்ஸ்மன், லூமினர், சிறிரஞ்சினி, அருணகிரிநாதன், திருமதி. சிரோமி ஸ்டீபன் ஆகியோர் உளவளச் சேவையை வழங்கினர். வைத்தியக் கலாநிதி சிவசங்கர் 88 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி முதலாவது துணை நாடிக்கு உளவளத்துணை வழங்கி




னார். இத்திகதியிலிருந்து யூன் 89 வரை 90 துணைநாடிகள் ஆற்றுப் படுத்தப்பட்டனர். - இதிலிருந்து முழு அளவில் இயங்கும் நிலையமாக இது மாறியது.

***கேள்வி:-*** இந்நிலையத்தின் நோக்கங்களும், செயற்பாடுகளும் எப்படியுள்ளது?

***பதில்:-*** ''உளவளத்திற்கும் சுகநலத்திற்குமான சங்கம்'' என்ற பெயரில் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனமாக 1989 ஆம் ஆண்டு பதிவு செய்யபபட்ட இந்த நிறுவனம், தனது செயற்பாடுகளை விரிவாக்கம் செய்தது.

தனக்கென ஒரு யாப்பை வகுத்துக் கொண்ட இச்சங்கம் -

வட இலங்கையில் இடர்படுவோர், நம்பிக்கையிழந்தோர், தற்கொலை செய்ய முயல்வோர் போன்றவர்களுக்கு மருத்துவ உதவியும், உளவள உதவியும் கிடைக்கச் செய்தல், தேவையேற்படின் பிற நிபுணர்கள், நிறுவனங்களின் உதவியை அவர்கள் பெறத்துணை புரிவது, உள்த்துணை தேவைப்படும் மக்கட்குழுக்களை இனம் கண்டு அவர்களது ஆரோக்கியம், புனர்வாழ்வு பற்றிய தேவைகளை ஆராய்ந்து - தனது பணியின் மூலமோ, பிற நிறுவனங்கள் மூலமோ உதவி பெறச் செய்வது;

சுகாதார சேவையை அடிப்படையாகக் கொண்ட அரச, தனியார், அரசசார்பற்ற நிறுவனங்களின் சேவையை ஆராய்ந்து, கிடைக்கும் சுகாதார வளங்களை முழுமையாகப் பயன்படுத்தக் கூடிய வகையில் அவை ஒத்துழைக்கும்படியான ஒரு அமைப்பினை உருவாக்கத் துணை புரிவது, பயிற்சி வழங்குவது;

வருங்காலத்தில் உளத்துணை அளிக்க வேண்டிய தேவையைக் குறைப்பதற்காகத் தொடர்பு கொள்ளல். வாழ்க்கைத் திறன்கள் தடுப்பு முறைகள் பற்றிய இளைஞர் கற்கை நெறிகளை நடத்துவது;

மூல வளங்களைப் பயன்படுத்தக் கூடியவாறு பிரதேச ரீதியாகவும், தேசிய ரீதியாகவும் சுகாதார வளங்களையும் உளத்துணை வளங்களையும் திரட்டுவது, ஆகிய நோக்கங்களுடன்;

தனிப்பட்ட ஆலோசனை, பாதிப்புற்ற சிறுவர் பாராமரிப்பு, குடும்ப ஆலோசனை, குழுக்களில் உள நலம் பேணுதல், உளவளத்துணையாளர் பயிற்சி வழங்குதல், ஆய்வரங்குகளும் பட்டறைகளும் மற்றும் விரிவுரைகள் ஆகியவற்றையும் செயற்படுத்தி வருகின்றது.



என்.கனகரத்தினம்

***கேள்வி:-*** இங்கு வழங்கப்படுகின்ற பயிற்சிகளுக்கான அனுசரணைகள் எவ்வாறு உள்ளன?

***பதில்:-*** பெரும்பாலான பயிற்சி நெறிகள் அரசசார்பற்ற நிறுவனங்களான குவேக்கர் சமாதான சேவை, நோராட், கனேடிய உதவி நிலையம், குடும்ப புனர்வாழ்வு நிலையம் என்பனவற்றின் அனுசரணையுடனேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

***கேள்வி:-*** யாழ்.குடாநாட்டில் யுத்த நடவடிக்கைகளால் இடம் பெற்ற இடம்பெயர்வுகளின்போது இதன் செயற்பாடுகள் என்ன மாதிரி இருந்தது?

***பதில்:-*** 1990 இல் இடம்பெற்ற விமானக்குண்டு வீச்சினால் பாதிப்புற்ற 'சாந்திகம்' கச்சேரி - நல்லூர் வீதியில் இயங்கத் தொடங்கியது. பின்னர் 1995 இல் இடம்பெற்ற வலிகாமம் இடப்பெயர்வு காரணமாக இதன் செயற்பாடுகள் யாவும் முடங்கிவிட்டன. மீள 1996 ஆம் ஆண்டில் தனது செயற்பாடுகளை ஆரம்பித்தது. 2000 ஆம் ஆண்டு மே மாதம் தென்மராட்சியில் ஏற்பட்ட யுத்தத்தை அடுத்து இடம்பெயர்ந்து, இணுவில் மக்லியோட் வைத்திய சாலையில் இயங்கியது. மீள 2002 ஜனவரியில் சொந்த இடத்திற்கு வந்து இன்றுவரை செயற்பட்டு வருகின்றது.

***கேள்வி:-*** 'சாந்திகத்தின்' செயற்பாடுகளுக்கு பிரதான ஆலோசனைகளைத் தற்போது எவ்வாறு பெறுகிறீர்கள்?

***பதில்:-*** யாழ்.பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்தில் உள நலப் பகுதித் தலைவராகவும், உள நலச் சிகிச்சை நிபுணராகவும் விளங்கும் போராசியர் தயா சோமசுந்தரம் 1989 இல் சாந்திகத்துடன் இணைந்து கொண்டார். இவர் போரினால் ஏற்பட்ட நெருக்கீடுகள் பற்றியும், அவற்றை கையாளும் முறைகள் சார்ந்த வழிபாட்டு முறைகள் பற்றிய பிரசுரங்களை வெளியிட்டு சாந்திகத்திற்கு உதவினார். தற்போது இச் சாந்திகத்தின் ஆலோசனைச் சபையின் தலைவராக விளங்கும் இவர், சாந்திகம் நின்றுநிலைகக காரண கர்த்தாவாக விளங்குகிறார்.

***கேள்வி:-*** சாந்திகத்தினால் இது வரை வெளியிடப்பட்ட வெளியீடுகள் பற்றி...?

***பதில்:-*** காலத்திற்குக் காலம் உளநலம் தொடர்பான வெளியீடுகளை வெளியிட்டு வருகின்றது. 1997 இல் "மனவெளி" என்ற தலைப்பில் 5 இதழ்கள் வெளியிடப்பட்டன. பேராசிரியர் தயா சோமசுந்தரம் ''மனவடு'' என்ற தமிழ் நூலையும், ஆங்கில நூலொன்றையும் வெளியிட்டார். உலக சுகாதார நிறுவனத்தின் அனுசரணையுடன் கம்போடியாவில் பேராசிரியர் பெற்ற அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு ''தமிழர் சமுதாயத்தில் உளநலம்'' என்ற நூல் இவராலும், வைத்திய கலாநிதி எஸ்.சிவயோகன் அவர்களாலும் தொகுக்கப்பட்டு வெளியாகியுள்ளது. இந்நூல் ஆங்கிலத்திலும் **'Mental Helth in Tamil Community'** என்ற தலைப்பிலும் வெளியிடப்பட்டது. மேலும் முதுமையின் குணாம்சங்களையும், ஆற்றாமையையும், எதிர்கொள்ளலையும் விளக்கும் நூலும் இவ்இருவராலும் தொகுக்கப்பட்டு ''முதுமை'' என்ற பெயரில் வெளிவந்துள்ளது.

*

**நேர்காணல் - ஸ்ரீநடா**

# தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளல் - 2002

**தமிழீழ மீட்புநிதிக் கடன் திட்டத்தின் கீழ், கடன் கொடுத்தவர்களில் - குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட இரண்டாயிரத்து நானூறு பேரில் - இறுதிப் பட்டியலை தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை வெளியிட்டுள்ளது.**

**இக்கடன் மீளலுக்குத் தெரிவானோர் விவரம் வருமாறு:-**

## கிளிநொச்சி மாவட்டம்

| | | |
|---|---|---|
| 001). | வ/கி/51 | திருமதி. பராசக்கி தர்மராசா |
| 002). | வ/கி/87 | திருமதி. புவனேஸ்வரி முத்தையா |
| 003). | வ/கி/101 | திருமதி. இரத்தினம் செல்வராணி |
| 004). | வ/கி/133 | திருமதி. மனோன்மணி இரத்தினசபாபதி |
| 005). | வ/கி/154 | திரு. காளிமுத்து முத்தையா |
| 006). | வ/கி/159 | திரு. வேலுப்பிள்ளை இராசரத்தனம் |
| 007). | வ/கி/167 | திரு. மரியதாசன் யேசுதாஸ் மனோகரராஜ் |
| 008). | வ/கி/174 | திரு. கதிரவேலு திருஞானசோதி |
| 009). | வ/கி/193 | திரு. ஞானமுத்து இன்னலிங்கம் |
| 010). | வ/கி/200 | திருமதி. விஜயகுமாரி சிறிகுமாரவேல |
| 011). | வ/கி/239 | திருமதி. வேதநாயகிஅம்பாள் பூலோகசிங்கம் |
| 012). | வ/கி/249 | திரு. வேலுப்பிள்ளை கந்தசாமி |
| 013). | வ/கி/260 | திரு. சுப்பிரமணியம் குணரத்தினம் |
| 014). | வ/கி/282 | திரு. இராமலிங்கம் இராசமாணிககம் |
| 015). | வ/கி/328 | திரு. நல்லதம்பி சொர்ணலிங்கம் |
| 016). | வ/கி/440 | திரு. சுப்பிரமணியம் சிவராசலிங்கம் |
| 017). | வ/கி/452 | திரு. குமாரசாமி மகேந்திரன் |
| 018). | வ/கி/457 | திரு. செல்லப்பா நமசிவாயம் |
| 019). | வ/கி/461 | திரு. கறுப்பையா வெள்ளைச்சாமி |
| 020). | வ/கி/464 | திரு. சின்னத்துரை நவரட்ணராசா |
| 021). | வ/கி/485 | திரு. தம்பையா தியாகராசா |
| 022). | வ/கி/506 | திரு. சதானந்தன் தயானந்தன் |
| 023). | வ/கி/521 | திரு. நடராசா கதிரமலை |
| 024). | வ/கி/551 | திரு. வைரவன் நாகலிங்கம் |
| 025). | வ/கி/572 | திரு. கந்தவனம் மனோர்லிங்கம் |
| 026). | வ/கி/611 | திரு. சதாசிவம் சிவகுமார் |
| 027). | வ/கி/682 | திரு. கிட்ணன் நல்லையா |
| 028). | வ/கி/687 | திரு. அருணாசலம் துரைசிங்கம் |
| 029). | வ/கி/693 | திருமதி. சிவபாக்கியம் சிவகுருநாதன் |
| 030). | வ/கி/710 | திரு. குணபாலசிங்கம் பிறேமபாலன் |
| 031). | வ/கி/762 | திருமதி. இராசம்மா கனகசபை |
| 032). | வ/கி/764 | திரு. மார்க்கண்டு மோட்சலிங்கம் |
| 033). | வ/கி/772 | திரு. பொன்னம்பலம் ஸ்ரீரங்கநாதன் |
| 034). | வ/கி/774 | திரு. பரமு சுப்பிரமணியம் |
| 035). | வ/கி/780 | திரு. வல்லிபுரம் தங்கேஸ்வரன் |
| 036). | வ/கி/790 | திரு. நமசிவாயம் செல்லப்பா |
| 037). | வ/கி/793 | திரு. தங்கராசா வையகுருநாதன் |
| 038). | வ/கி/827 | திரு. நாகேந்திரம் சுந்தரலிங்கம் |
| 039). | வ/கி/878 | திருமதி. பாலேஸ்வரி நவரத்தினம் |
| 040). | வ/கி/917 | திரு. பொன்னம்பலம் அருளம்பலம் |
| 041). | வ/கி/929 | திரு. கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை |
| 042). | வ/கி/1080 | திரு. ஆறுமுகம் சோமசுந்தரம் |
| 043). | வ/கி/1092 | திருமதி. மங்களேஸ்வரி சந்திரகுமாரன் |
| 044). | வ/கி/1122 | திரு. வேலுப்பிள்ளை இராசரத்தினம் |
| 045). | வ/கி/1133 | திரு. சரவணமுத்து கந்தையா |
| 046). | வ/கி/1155 | திரு. தம்பையா கமலநாதன் |
| 047). | வ/கி/1156 | திரு. சங்கரப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை |
| 048). | வ/கி/1248 | திரு. சித்தர் சிதம்பரநாதன் |
| 049). | வ/கி/1293 | திரு. கந்தர் வித்தியானந்தன் |
| 050). | வ/கி/1298 | திரு. தம்பு கந்தர் |
| 051). | வ/கி/1320 | திரு. மிக்கேல் இராயப்பு |
| 052). | வ/கி/1373 | திருமதி. சிசீலியா பஸ்ரியாம்பிள்ளை |
| 053). | வ/கி/1376 | திருமதி. சிவமலர் குணரத்தினம் |
| 054). | வ/கி/1389 | திருமதி. கமலாம்பிகை சின்னத்தம்பி |
| 055). | வ/கி/1400 | திருமதி. இராசலச்சுமி யோகலிங்கம் |
| 056). | வ/கி/1403 | திரு. சின்னர் பொன்னம்பலம் |
| 057). | வ/கி/1405 | திருமதி. சாந்தி ரவிராஜ் |
| 058). | வ/கி/1419 | திரு. வைத்தியநாதன் கணேசன் |
| 059). | வ/கி/1430 | திரு. வயிரமுத்து முரகமூர்த்தி |
| 060). | வ/கி/1448 | திரு. கந்தையா இராசமகேந்திரர் |
| 061). | வ/கி/1471 | திரு. தாமோதிரம்பிள்ளை கனகரத்தினம் |
| 062). | வ/கி/1476 | திரு. மாணிக்கம் பாலசுப்பிரமணியம் |
| 063). | வ/கி/1484 | திரு. சிவசம்பு பரந்தாமன் |
| 064). | வ/கி/1510 | திரு. பாலன் சிவக்கொழுந்து |
| 065). | வ/கி/1537 | திருமதி. சின்னப்பிள்ளை ஏரத்வண்டா |
| 066). | வ/கி/1562 | திரு. சின்னத்தம்பி இராசநாயகம் |
| 067). | வ/கி/1569 | திரு. பெஞ்சமின் பற்றிக் |
| 068). | வ/கி/1570 | திரு. துரைச்சாமி தெய்வேந்திரா |
| 069). | வ/கி/1577 | திரு. கணபதிப்பிள்ளை வேலாயுதம் |
| 070). | வ/கி/1616 | திருமதி. சந்திரமலர் சிவநேசச்செல்வன் |
| 071). | வ/கி/1679 | திரு. கனகசபாபதி சோமரட்ணம் |
| 072). | வ/கி/1752 | திரு. கணபதிப்பிள்ளை தியாகராசா |
| 073). | வ/கி/1772 | திரு. இராசையா அனந்தசேகரம் |
| 074). | வ/கி/1780 | திரு. செல்லையா சுந்தரலிங்கம் |
| 075). | வ/கி/1783 | திருமதி. சந்திரகுமாரி சங்கரலிங்கம் |
| 076). | வ/கி/1814 | செல்வி. மகேஸ்வரி சின்னராசா |
| 077). | வ/கி/1817 | திரு. சிவசம்பு தில்லைநாதன் |
| 078). | வ/கி/1850 | திரு. சின்னட்டி முத்து |
| 079). | வ/கி/1853 | திரு. ஐயாக்கண்ணு வீரய்யா |
| 080). | வ/கி/1855 | திரு. வைத்தீஸ்வரன் ஜெயபாலன் |
| 081). | வ/கி/1860 | திரு. நாகலிங்கம் சிவராசா |
| 082). | வ/கி/1902 | திரு. சின்னக்குட்டி சின்னையா |
| 083). | வ/கி/1906 | திருமதி. நாகம்மா சேனாதிராசா |
| 084). | வ/கி/1947 | திருமதி. பரராஜசேகரன் மேரிபொலினா |
| 085). | வ/கி/1958 | திரு. அருளானந்தம் பேட்றன்றஞ்சித் |

(நாளை தொடரும்)

# பனை அபிவிருத்திச்சபை, திக்கம் வடிசாலை முன்பாக மறியல் போராட்டம் தொடர்கிறது



பனை அபிவிருத்திச் சபை முன்பு மறியல்

(யாழ்ப்பாணம்)

திக்கம் வடிசாலையை வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்தி சங்கங்களின் கொத்தணியிடம் ஒப்படைக்கக் கோரி, நேற்று நான்காவது நாளாக பனை அபிவிருத்திச் சபை அலுவலகம், திக்கம் வடிசாலை ஆகியவற்றுக்கு முன்பாக மறியல் போராட்டம் நடைபெற்றது.

இதனால் பனை அபிவிருத்திச் சபை அலுவலக செயற்பாடுகள் செயலிழந்ததுடன், திக்கம் வடிசாலையின் பனஞ்சாராய உற்பத்தியும் பாதிப்படைந்தது. நேற்றும் வழமைபோல இரு இடங்களினதும் அலுவலகங்களின் முன்பாகக் கூடிய தொழிலாளர்கள், ஊழியர்கள் உள்ளே செல்ல முடியாதவாறு அமர்ந்திருந்தனர். இதனால் அலுவலகத்திற்கு வந்த ஊழியர்கள் திரும்பிச் சென்றனர்.

நேற்று முன்தினம் இப்போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு ஆதரவு தெரிவித்து, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களின் பனை தென்னை வள அபிவிருத்தி சங்கங்களின் தலைவர்கள், முகாமையாளர்கள், உறுப்பினர்கள் அடங்கிய 26 பேர் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

இம்மறியல் போராட்டம் இன்று விடுமுறை நாளில் நடைபெறாது என்றும், வழமைபோல நாளை நடைபெறும் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலையில் செயற்பட முடியாத நிலையில் கோபால்ற் கதிரியக்கக் கருவி



தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலையில் உள்ள புற்றுநோயாளருக்கு கதிரியக்கம் மூலம் சிகிச்சை வழங்குவதற்கு பயன்படுத்தும் "கோபால்ற் யுனிற்" எனப்படும் இயந்திரம், மீள செயற்படுத்த முடியாத நிலையில் காணப்படுகிறது. 40 மில்லியன் ரூபா பெறுமதியான இவ்வியந்திரம் புதிதாக வைத்தியசாலையில் பொருத்தப்பட்டதற்கு இதுவரை இதன்மூலம் எவரும் சிகிச்சை பெறவில்லை.

இவ்வியந்திரத்தை பார்வையிட்ட வைத்திய அதிகாரிகள், அதன் தொழிற்பாட்டின் முக்கிய பாகம் காணாமற்போயுள்ளதாக தெரிவித்தனர். (68)

# பொங்கல் - 2003 கண்காட்சி யாழ்.நகரில் நடாத்த ஏற்பாடு

யாழ்.நகரில், 'பொங்கல்- 2003' எனும் மாபெரும் கண்காட்சியினை யாழ்.வர்த்தகர் சங்கம், யுனிகுயிக் நிறுவனத்துடன் இணைந்து நடாத்தத் திட்டமிட்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் பத்தாம் திகதி முதல் பன்னிரெண்டாம் திகதி வரையிலான மூன்று தினங்களுக்கு, இந்நிகழ்வு- யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடை பெறவுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட யாழ். உற்பத்தியாளர்கள் இக்கண்காட்சியில் இலவசமாகப் பங்குகொள்ள முடியும் என யாழ். வர்த்தக சங்கத்தினர் தெரிவித்தனர்.

இவ்வர்த்தகக் கண்காட்சியில் தமது உற்பத்திப் பொருட்களை காட்சிக்கு வைக்க விரும்பும் உற்பத்தியாளர்கள், எதிர்வரும் ஜனவரி மூன்றாம் திகதிக்கு முன் யாழ். வர்த்தகர் சங்கத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

## கடவுச் சீட்டு இவ் வருடம் அதிகளவு விநியோகம்

இந்த வருடம் வெளிநாட்டுக்கு செல்வதற்கான கடவுச்சீட்டுக்கள் கூடுதலாக விநியோகிக்கப்பட்டுள்ளன என்று குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

2002 ஒக்டோபர் மாதம் வரை பத்து மாதங்களில் 3,14,000 கடவுச் சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

முன்பு ஒரு கடவுச்சீட்டு தயாரிப்பதற்கு ஏழு மணித்தியாலங்கள் வேண்டும். தற்போது மறுசீரமைப்பின் பின், இரண்டு மணித்தியாலத்துக்குள் ஒரு கடவுச் சீட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவரை கடவுச்சீட்டு பெறுவதில் மக்களுக்கிருந்த சிரமங்கள் தற்போது நீக்கப்பட்டுள்ளன என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது.



## இரணவிலவில் படகு சிக்கியது

(கொழும்பு)

இத்தாலிக்கு சட்டவிரோதமாக இலங்கைக்குழு ஒன்றை கொண்டு செல்லத் தயாராயிருந்த படகு ஒன்றையும், அதில் இருந்தவர்களையும் இரணவில கடற்கரை ஓரத்தில் கடற்படையினர் பிடித்தனர்.

இந்தப் படகு மேலதிக விசாரணைகளுக்காக கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டது.

# பங்குத் தந்தை தலைமையில் பெரியவிளானில் கசிப்பு வேட்டை

(காங்கேசன்துறை)

பெரியவிளான் புனித அந்தோனியார் சனசமூக நிலையமும், புனித அந்தோனியார் இளைஞர் ஒன்றியமும் இணைந்து- அப்பகுதி பங்குத்தந்தை தலைமையில் கசிப்பு வேட்டையில் ஈடுபட்டனர்.

திக்கரை, வசந்தபுரம் ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட கசிப்பு வேட்டையின்போது- 400 லீற்றர் கோடா, 100 லீற்றர் கசிப்பு, பெருந்தொகையான கசிப்பு உற்பத்திசெய்யும் உபகரணங்கள் கைப்பற்றப்பட்டன.

ஆரோக்கியமான ஒரு சமுதாயத்தை கட்டியெழுப்புவதே இக்கசிப்பு வேட்டையின் நோக்கம் என பங்குத் தந்தை அருட்திரு. ஞானரட்ணம் அடிகளார் தெரிவித்தார்.

(71)

## வீதிவிளக்கின்மையால் திருட்டு அதிகரிப்பு

(அரியாலை)

அரியாலை நாயன்மார்கட்டுப் பகுதிகளில் தெரு மின்விளக்குகள் இல்லாமையால் இரவுநேரத்தில் போக்குவரத்து செய்யும் மக்கள் பலத்த அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இப்பகுதிகளில் வழிப்பறித்திருடர்களின் தொல்லைகளும் அதிகரித்துள்ளன. (55)




வடக்கு - தெற்கு உறவுப் பாலமாக லயன் எயர் நிறுவனம், யாழ். அழைத்து வந்த சிறுவர்களை, நேற்று முன்தினம் பலாலி விமான நிலையத்தில் வைத்து, சுகவாழ்வு நிறுவன சிறுவர்கள் வரவேற்பதையும்- விமானத்திலிருந்து நத்தார் தாத்தா இறங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்- லிவிங்ஸ்டன்)

# நகரில் நடைபாதை வியாபாரிகள் பொலிஸாரால் அகற்றப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆஸ்பத்திரி வீதியின் நடைபாதைகளில், வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டவர்களது பொருட்கள் மாநகர சபை மற்றும் பொலிஸாரினால் அகற்றப்பட்டன.

நேற்று நண்பகல், வீதியின் இரு மருங்கிலும் வியாபாரத்திற்காக பொருட்களை பரப்பி விற்பனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை -

யாழ். மாநகர சபை ஊழியர்களும் உறுப்பினர்களும், மேயரின் பணிப்பின் பேரில் அப்பகுதிக்குச்சென்று பொலிஸாரின் உதவியுடன் பொருட்களை உழவு இயந்திரங்களில் ஏற்றி, பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றதுடன் வியாபாரிகளின் அடையாள அட்டைகளையும் வாங்கிச் சென்றனர்.

பொலிஸ் நிலையத்திற்கு சென்ற வியாபாரிகள், வீதியோரங்களில் விற்பனை செய்யக்கூடாது என எச்சரிக்கப்பட்டதுடன் அவர்களது அடையாள அட்டைகள், விறபனைப் பொருட்களும் உரியவர்களிடம் மீள ஒப்படைக்கப்பட்டன.

கடந்த சில வாரங்களுக்கு முன்னரும் யாழ்.நகரில் உள்ள பழக்கடைப் பகுதியில் நடைபாதை வியாபாரம் மேற்கொண்டவர்கள் பொலிஸாரால் அங்கிருந்து அகற்றப்பட்டமை தெரிந்ததே. (ச)



நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புனர்வாழ்வு நடவடிக்கைக்கு புதிய குடும்ப அட்டைத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் நிவாரண, புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வசதியாக புதிய குடும்ப அட்டைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் ஏற்கனவே 1989 ஆம் ஆண்டு நடைமுறையில் இருந்த மாதிரியான குடும்ப அட்டைத்திட்டம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

எதிர்காலத்தில் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் ஒருங்கிணைந்த வகையிலான நிவாரண, புனர்வாழ்வு செயற்திட்டங்களை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு- மேற்படி குடும்ப அட்டைத் திட்டம் பெரும் உதவியாக அமையும் என்று கருதப்படுகிறது.

மேற்படி குடும்பப் பதிவு அட்டையை யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை யாழ்.செயலகம் மேற்கொண்டுவருகிறது.

மிகத்துரிதமாக இந்த நடவடிக்கையை மேற்கொள்ளும்படி கோரி, அனைத்துப் பிரதேச செயலகங்களுக்கும், விரைவில் யாழ். செயலகத்திலிருந்து பணிப்புரைகள் வழங்கப்படவிருக்கின்றன.

(க)

English Academy
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
E.mail: thangan 672002 @ yahoo.com
T.P.: 021-2222588
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
பிரதான வீதி, சித்தங்கேணி.
Better place for your Children
உங்கள் பிள்ளைகளுக்கு சிறந்த இடம்
(சி-186)




நத்தார் தினத்தையொட்டி நேற்று யாழ். நகர் மக்கள் கூட்டம் நிரம்பிய நிலையில் களைகட்டியிருந்தது.

# மீளக்குடிமர்ந்த அனைவருக்கும் 15 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

## 'உ' அட்டை வைத்திருப்போருக்கும் கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மீளக் குடியமர்ந்த குடும்பங்கள் அனைத்துக்கும் பதினையாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. இக் கொடுப்பனவு ஆயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கு மேற்பட்ட வருமானமுடைய 'உ' அட்டை உடைய குடும்பங்களுக்கும் வழங்கப்படவுள்ளது. மேற்படி கொடுப்பனவு வழங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் யாழ்.செயலகம் மேற்கொண்டு வருகிறது. இதற்கான பணிப்புரை, அனைத்து பிரதேச செயலர்களுக்கும் யாழ். செயலகத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி கொடுப்பனவு, அண்மையில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படவுள்ளது. ஏனைய குடும்பங்களுக்கு படிப்படியாக வழங்கப்படவிருக்கின்றது. மீளக் குடியமர்ந்தால் கொடுப்பனவு என்ற அடிப்படையில், ஏற்கனவே ஐயாயிரம் ரூபா பெற்றுக்கொண்டவர்களுக்கு மிகுதிக் கொடுப்பனவாக பத்தாயிரம் ரூபா வழங்கப்படவிருக்கிறது. இவ்வாறான கொடுப்பனவுக்காக உலக வங்கியிடமிருந்து பெறப்பட்ட நிதியில் ஒருபகுதி பயன்படுத்தப்படவிருக்கிறது.

(க)

# மணலாறில் சிப்பாய் காணாமற்போனார்

(கொழும்பு)

மணலாறில் இராணுவச் சிப்பாய் ஒருவர் நேற்று காணாமல் போயுள்ளார்.

இவர் வெலிஓயா முகாமில் இருந்து ஆயுதத்துடன் வெளியில் சென்றதாகவும், இதுவரை முகாமுக்கு திரும்பவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவரை விடுதலைப் புலிகள் கடத்தியிருக்கலாம் எனச் சந்தேகிப்பதாக, படைத்தரப்பு - போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவிடம் முறையிட்டுள்ளனர்.

(01)

# ராகிங்கில் பலியான கோப்ரல்; விசாரணைக்கு அதிகாரி வருகை

(யாழ்ப்பாணம்)

முகமாலைக் காவலரணில் கடைமையில் இருந்த சமயம் சிரேஷ்ட அதிகாரிகளின் ராகிங் கால் குளத்தில் மூழ்கி இறந்த இராணுவ கோப்ரலின் மரணம் குறித்து உடனடியாக விசாரணை நடத்துமாறு இராணுவத் தளபதி உத்தரவிட்டுள்ளார்.

மேஜர் ஜெனரல் கே.வி.எகொடவில இந்த விசாரணையை நடத்துவார். நேற்று அவர் முகமாலைப் பகுதிக்கு விஜயம் செய்து விசாரணைகளை மேற்கொண்டதாகத் இராணுவப் பேச்சாளர் சனத் கருணரத்ன தெரிவித்துள்ளார்.

சிரேஷ்ட இராணுவ குழு ஒன்று ராகிங்கில் ஈடுபட்டதனால் மேலும் ஆறு இராணுவத்தினர் நீரில் மூழ்கி மயங்கிய நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக 13 படையினர் கைது செய்யப்பட்டதாக பொலிசார் தெரிவிக்கின்றனர். (விரிவான முன் வந்த செய்தி 9ஆம் பக்கத்தில்)

# ஆரையம்பதியில் துப்பாக்கிச் சூடு வரதன் அணி உறுப்பினர் காயம்

(கொழும்பு)

ரெலோவில் இருந்து பிரிந்து சென்று விசேட அதிரடிப்படையுடன் செயற்பட்ட வரதன் அணியின் உறுப்பினர் சுடப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று இரவு 7.25 அளவில் மட்டக்களப்பு ஆரையம்பதியில் இடம்பெற்றது. இவர் அண்மையில் சுட்டுக்கொல்லப்பட்ட வரதனின் சகோதரர் உதயகுமார் என அடையாளம் காணப்பட்டுள்ளார். ரெலோவில் இருந்து பிரிந்து சென்ற இவர், தற்சமயம் விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து செயற்பட்டுவந்தார்.

நத்தார் வெடிச்சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்த சமயம், இவர் மீது துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டுள்ளன.

முதுகில் காயமடைந்த இவர் தற்சமயம் மட்டக்களப்பு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(01)

## அக்கரைப்பற்றில் அதாவுல்லா அணியினரின் பேராளர் கூட்டம்

(அக்கரைப்பற்று)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் போட்டிக்குழுவினரான அதாவுல்லா தலைமையிலான அணியினர் இன்று அக்கரைப் பற்றில் முஸ்லிம் காங்கிரஸின் பேராளர் மாநாட்டைக் கூட்டியுள்ளனர்.

இம் மாநாட்டில் பேராளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும், இம்மாநாட்டினைத் தொடர்ந்து முஸ்லிம் காங்கிரஸின் உண்மையான தலைமை யாரிடம் உள்ளது என்பது வெளிவரும் என்றும் அதாவுல்லா அணியினர் அறிவித்துள்ளனர்.

(200)

# உறுப்பினர் சரணடையவில்லை ஈ.பி.டி.பி. அமைப்பாளர் மறுப்பு

ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர் நெடுந்தீவு மக்களிடம் சரணடைந்தார் என வெளியான செய்திக்கு அக்கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கே.வி.குகேந்திரன் மறுப்புத்தெரிவித்துள்ளார்.

மிரட்டல் மற்றும் அச்சுறுத்தல் காரணமாக குணம் எனப்படும் க.இராமச்சந்திரன் உயிரைப் பாதுகாக்கும் வகையில் எதையும் கூறியிருக்கக் கூடும்.

ஆனால் நாம் எவரையும் அச்சுறுத்திப் பணியச் செய்து தடுத்து வைத்திருக்கவில்லை என அவர் விடுத்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## மீள்குடியேற்ற....

தமிழர்கள் சாதாரண வாழ்வை தொடர அரசு ஆவன செய்தால் எவ்வித பிரச்சனையும் கிடையாது என தமிழ்ச்செல்வன் பதிலளித்தார்.

## நிரந்தர....

ஒரு சிலரே எதிர்க்கின்றனர்.

அமைதியைக் குழப்ப முயலும் அவர்களை நாம் கண்டிக்க வேண்டும்.

இம்முறை சமாதானத்திற்கு ஒத்துழைப்பு வழங்காதவர்களை வரலாறே மன்னிக்கமாட்டாது. இன்று நாம் நிம்மதியாக இருக்கின் றோம். இந்த நிம்மதி என்றும் தொடர வேண்டும் என்றும் பேராயர் கோமிஸ் அப்போது மேலும் தெரிவித்தார்.

(200)

# காய்ச்சலால் இருவர் ஆஸ்பத்திரியில் மரணம்

(யாழ்ப்பாணம்)

காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட இருவர் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமடைந்துள்ளனர்.

நேற்றைய தினம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சுழிபுரத்தை சேர்ந்த இரத்தினசிங்கம் விமலதாசன் (வயது 22) என்பவரும் , மற்றுமொரு நோயாளியும் மரணமடைந்தவர்களாவார்.

(இது தொடர்பான மற்றுமொரு செய்தி உள்ளே)

(ச)

# நெல்லியடியில் கைப்பற்றிய சைக்கிள்கள் ஒப்படைப்பு

(பருத்தித்துறை)

நெல்லியடியில் ஈ.பி.டி.பியினரை வெளியேறக்கோரி நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது கைப் பற்றப்பட்ட 5 மோட்டார் சைக்கிள் களும் 10 துவிச்சக்கர வண்டிகளும் பொலிசாரால் ஒப்படைக்கப் பட்டன.

நேற்று 24 ம் திகதி பருத்தித் துறை நீதவான் திருநாவுக்கரசு முன்னிலையில் ஒப்படைக்கப்பட்ட இவை, பெருஞ்சேதத்திற்குள்ளான நிலையில் காணப்படுகின்றன.

ஐ.பி.சி செய்தியாளர் தவச்செல்வத்தினது மோட்டார் சைக்கிளும் இவற்றுள் அடங்குவதாகவும் அதன் பெற்றோல் கொள்கலனில் சீனி நிரப்பப்பட்டுள்ள நிலையில் காணப் பட்டுள்ளதாகவும் அறிய வருகிறது.

## வி.கே.ராமசாமி காலமானார்

பழம்பெரும் தமிழ் திரைப்பட நடிகர் வி.கே. இராமசாமி நேற்று காலமானார். அவருக்கு 76 வயது. அவர் சிறிது காலமாக நோய்வாய்ப் பட்டிருந்தார்.

சுமார் 500 திரைப்படங்களில் நடித்துள்ள அவர், தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருதைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.42 | 96.87 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 153.40 | 154.71 |
| 1 யூரோ | 98.68 | 98.72 |
| 1 சுவிஸ் பிராங் | 67.64 | 68.55 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 53.86 | 54.67 |
| 1 ஜப்பானிய யென் | 00.80 | 00.81 |
| 1 சவூதி றியால் | 25.78 | 25.78 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 25.12.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.